வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 62 | பக்கங்கள் : 16

# ஈரானியக் கப்பல்களில் மீட்கப்பட்டோரை இலங்கை அரசாங்கம் விடுவிக்கக்கூடாது!

## அமெரிக்கத் தூதரகம் இலங்கைக்கு கடும் அழுத்தம்
## ஈரானின் பிரசாரத்துக்குத் துணைபோகக் கூடாது என்றும் வேண்டுதல்

கொழும்பு, மார்ச் 08

ஈரானிய கடற்கலங்களில் பயணித்து, இலங்கையில் தற்போது தஞ்சமடைந்துள்ள ஈரானியர்கள் எவரையும் மீள ஈரானுக்கு அனுப்பக் கூடாது என்று இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்கத் தூதரகம் கடுந்தொனியில் உத்தரவிட்டிருப்தாகத் தெரிவிக்கப்படுறது.

கடந்த 4ஆம் திகதி இலங்கையின் காலிக் கடலை அண்மித்த சர்வதேச கடற்பரப்பில் வைத்து அமெரிக்காவின் நீரடித் தாக்குதலுக்கு உள்ளாகிய “ஐரிஸ் டேனா” போர்க் கலத்தில் இருந்த சுமார் 180 கடற்படை வீரர்களில் காயமடைந்த நிலையில், இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்ட 32 பேரையும், கடந்த 05 ஆம் திகதி - வியாழக்கிழமை “ஐரிஸ் புச்சர்” என்ற கலத்திலிருந்தவாறு இலங்கையிடம் உதவிகோரிய சமயம் மனிதாபிமான அடிப்படையில், ஜனாதிபதி அனுர குமார திசநாயக்காவின் விசேட பணிப்புரைக்கமைவாகக் கரை சேர்க்கப்பட்ட சுமார் 208 பேரையுமே மீளவும் ஈரானுக்குத் திருப்பி அனுப்பக் கூடாது என்று இலங்கை அரசாங்கத்துக்கு, அமெரிக்கத் தூதரகத்தினால் உயர்மட்ட அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக “ரொய்ட்டர்ஸ்” செய்தி

15

## ஈரானியக் கப்பல் விவகாரத்தில் இலங்கை அரசுக்கு பெரும் சவால்!

கொழும்பு, மார்ச் 08

அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதலில் சேதமடைந்த ஈரானியக் கப்பல் மற்றும் மற்றுமொரு கப்பல் விவகாரத்தில் இலங்கை அரசும் பாதுகாப்புப் படையினரும் பாரிய சட்ட மற்றும் பாதுகாப்பு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் இடம் பெற்ற போர் பயிற்சியில் பங்கேற்றுவிட்டுத் திரும்பிய “ஐரிஸ் டெனா” கப்பல் மீது கடந்த

15



## ஹிக்கடுவ கடற்கரையில் ஈரான் கப்பல் பாகங்கள்!



கொழும்பு, மார்ச் 08

காலி கடற்கரையில் அமெரிக்காவால் தாக்கப்பட்டதாக

15

## ஈரானியக் கப்பல் விவகாரத்தில் சர்வதேச சட்டம் பின்பற்றப்படும்



### அமைச்சர் விஜித ஹேரத் உறுதி

கொழும்பு, மார்ச் 08

ஈரானிய கப்பல்களிலிருந்து மீட்கப்பட்டவர்கள் தொடர்பில் சர்வதேச கடல்சார் சட்டங்கள் பின்பற்றப்படும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இடம்பெற்ற ரைசினா மாநாட்டில் கலந்துகொண்டு அவர் இதனை குறிப்பிட்டார்.

15

## “ஈரானிய கப்பல் மீதான தாக்குதல் போர்க்குற்றம்”

### ஐ.நாவில் குற்றச்சாட்டு

ஜெனிவா, மார்ச் 08

இந்திய பெருங்கடலில் ஐ.ஆர்.ஐ.எஸ் டேனாவை மூழ்கடித்த அமெரிக்காவின் தாக்குதல் சர்வதேச சட்டத்தை மீறியது, போர்க்குற்றம் என்று ஈரான் ஐ.நா.வில் குற்றம் சாட்டியுள்ளது.

நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய ஐ.நா.வுக்கான ஈரானின் தூதர் அமீர் சயீத் இரவானி,

15

## ஈரான் கப்பல் மீட்கப்பட்டமை; இலங்கைக்கு ஐ.நா. பாராட்டு

கொழும்பு, மார்ச் 08

ஈரான் கப்பலையும் அதிலிருந்தவர்களையும் மீட்பதற்காக இலங்கை அரசாங்கத்தின் தலையீட்டுக்கு ஐக்கிய நாடுகள் சபை பாராட்டியுள்ளது.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச் தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டு பாராட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளின் அடிப்படையில் பல்லினத்தன்மை மீதான அர்ப்பணிப்பை மதித்து, நடுநிலைமை மற்றும் அமைதிக்காக இலங்கை அரசாங்கம்

15

## இலங்கையின் மீட்சிக்கு அடித்தளம் அரசின் மீதான மக்கள் நம்பிக்கை!

### சர்வதேச நாணய நிதியம் புகழாரம்



ஜெனீவா, மார்ச் 08

இலங்கை தற்போது பெற்று வரும் பொருளாதார மீட்சிக்கு, அந்த அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையே முக்கிய காரணம் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

கடினமான பொருளாதாரச் சீர்திருத்தங்களை

15

## வாகனங்களின் விலை உயராது!

கொழும்பு, மார்ச் 08

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் புதிய சுங்க வரி திருத்தங்கள் குறித்து, வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் விளக்கமளித்துள்ளது.

நிதி அமைச்சின் நிதி கொள்கை திணைக்கள அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, வரி அமைப்பில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சுங்க இறக்குமதி வரி தற்போதுள்ள 20 வீத வரி விகிதம் 30 வீதமாக ஆக உயர்த்தப்பட உள்ளது.

சுங்க வரி கூடுதல் கட்டணம் தற்போது நடைமுறையில் உள்ள 50 வீத கூடுதல் கட்டணம்,

15

## ஈரான் கப்பலுக்கு அடைக்கலம் கொடுத்தது சரியான முடிவே!

### சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 08

“ஈரான் கப்பல்கள் விவகாரத்தில் இலங்கை சரியான முடிவையே எடுத்துள்ளது. சர்வதேச சட்டத்துக்கமையவே செயல்பட்டுள்ளது.” என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

“இலங்கைக்கு அப்பால் உள்ள சர்வதேச கடற்பரப்பில் தாக்குதலுக்கு இலக்கான ஈரான் கப்பலில் இருந்தவர்களை இலங்கை கடற் படையினர் மீட்டனர்.

15

## கடலில் இனி தாக்குதல் நடக்காதென அமெரிக்காவிடம் உறுதி பெறுங்கள்!

### அரசிடம் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 08

இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் இனிமேல் இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட மாட்டாது என்பதற்கான உத்தியோகபூர்வ உறுதியை அமெரிக்காவிடமிருந்து இலங்கை அரசு பெற்றுக் கொள்ள வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கட்சியின் தலைமையகம் விடுத்துள்ள விசேட அறிக் கையிலேயே இவ்விடயம்

15

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இராணுவ தலைமையகத்தை அகற்ற அரசு தீர்மானிக்கவில்லை!

## பாதுகாப்பு பிரதி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, மார்ச். 08

யாழ்ப்பாணம் இராணுவ படைத் தலைமையகத்தை அகற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியாகிய செய்தி முற்றிலும் பொய்யானது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி விடுவிப்பின் போது சகல விடயங்களும் விரிவாக ஆராயப்படுகின்றன. தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்ததன் பின்னரே காணிகள் விடுவிக்கப்படுகின்றன என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர கால சட்டம் அமுலாக்கம் நீடிப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# இறுதி யுத்தகால இழப்புகளுக்கு நீதி ஏன் வழங்கப்படவில்லை?

## சிறீதரன் எம். பி. கேள்வி

கொழும்பு, மார்ச். 08

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மனிதாபிமான யுத்தம் என்ற பெயரில் 22 நாடுகள் விமானத் தாக்குதல்கள், பல்குழல் பீரங்கி தாக்குதல்களை விடுதலைப்புலிகள் மீது நடத்திய போது உலகத்தில் எவரும் எங்களுக்காக பேசவில்லை. யாரும் குரல் கொடுக்கவில்லை. இப்போது, வளைகுடாவில் நடக்கும் யுத்தம் மனிதாபிமானத்துக்கு எதிரானது என்றால் ஏன் இந்த நாட்டில் நடந்த இழப்புகளுக்கு நீதி வழங்கப்படவில்லை. ஏன் பொறுப்புக்கூறப்படவில்லை. தமிழினத்துக்கு நீதியை வழங்க இந்த அரசாங்கமும் தயங்குகிறது என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர கால சட்டம் அமுலாக்கம் நீடிப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# மால்டாவின் துணை பிரதமருடன் அமைச்சர் விஜித ஹேரத் சந்திப்பு

## முதலீட்டு வாய்ப்புகளை ஆராய அழைப்பு




புதுடில்லி, மார்ச். 08

இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்று வரும் 'ராய்சினா கலந்துரையாடல்' (Raisina Dialogue 2026) மாநாட்டின் ஒரு கட்டமாக, இலங்கை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், மால்டா நாட்டின் துணைப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான இயன் போர்க்கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக கடல்சார் ஒத்துழைப்பு, சுற்றுலாத்துறை, விசா வசதிகள், இருதரப்பு ஆலோசனைகள் என்பன குறித்து கலந்துரையாடப்பட்டன.

இலங்கை மற்றும் மால்டா ஆகிய நாடுகளுக்கு இடையிலான நீண்டகால நட்புறவை புதிய உயரத்துக்கு கொண்டு செல்வதில் இரு நாடுகளும் உறுதியாக இருப்பதாக இந்தச் சந்திப்பின் முடிவில் மீள உறுதிப்படுத்தப்பட்டது. (எ)

# யாழில் சீனிப்பாணி கரைசலை தேன் என்று விற்றவர் சிக்கினார்



யாழ்ப்பாணம், மார்ச். 08

யாழ்ப்பாணத்தில் சீனிப்பாணியை தூய தேன் எனவும் கலப்பட நெய்யையும் விற்பனைக்கு வைத்திருந்த விற்பனையாளருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் பொதுச் சுகாதார பரிசோதகர் தினேஷ் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது தூய தேன் என்று விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த தேன் போத்தல்களுக்குள் சீனிப்பாணியே காணப்பட்டதை கண்டறிந்து 19 போத்தல் சீனிப்பாணி கரைசல்களை கைப்பற்றியுள்ளார்.

இதேவேளை தூய நெய் என விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 8 போத்தல் நெய் போத்தல்களும் கலப்படம் நிறைந்தது என அவற்றையும் கைப்பற்றியுள்ளார்.

கைப்பற்றப்பட்ட சீனிப்பாணி கரைசல் மற்றும் கலப்பட நெய் என்பனவற்றை விற்பனைக்கு வைத்திருந்தமை தொடர்பில் விற்பனையாளரிடம் வாக்குமூலங்களை பதிவு செய்த பொதுச் சுகாதார பரிசோதகர், விற்பனையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். (எ-03)

# பருத்தித்துறை நகரில் நடைபெற்ற பொலிஸாரின் விசேட செயல்திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 08

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் நாடளாவிய ரீதியில் போதைப்பொருளுக்கு எதிரான செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் "முழு நாடும் ஒன்றாக" தேசிய செயல்திட்ட நிகழ்வுகள் போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை (2026.03.01 முதல் 2026.03.07 வரை) முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது "விற்கின்ற -அடிமையான அனைவருக்குமான அறிவித்தல்"- அகன்று செல்" எனும் வாசகத்தினை மையமாகக்கொண்டு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், ஓட்டோக்களில் ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன.

பொதுமக்களுக்கு போதைப் பொருள் ஆபத்துக்கள் குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டதுடன் வாகனங்களில் 'போதை ஒழிப்பு' ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. மேலும், அரச அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் விழிப்புணர்வு போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. (எ-08)

# வீதி மின் விளக்குகள் ஔிராததால் மாந்தை கிழக்கு மக்கள் அசௌகரியம்

முல்லைத்தீவு, மார்ச். 08

மாந்தை கிழக்கின் அனைத்து பகுதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் மிக நீண்டகாலமாக ஒளிராததால் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட மக்கள், இலங்கை மின் சார சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகிய இரண்டு அரச நிறுவனங்களுக்கும் உரித்தான சுமார் 80இற்கும் அதிகமான வீதி விளக்குகள் குறித்த பகுதிகளின் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ளன.

இருப்பினும், மிக நீண்ட காலமாக அந்த வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை.

சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களான வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மின் சார சபை ஆகியவற்றில் பல தடவைகள் அறிவித்தும் அந்த வீதி விளக்குகளை ஒளிர செய்வதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவில்லை.

இந்த பகுதியில் வீதி விளக்குகளின் தேவை அவசியம் என்பதால் உடனடியாக உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# திருகோணமலையில் ஈரானின் கப்பலை நிறுத்த என்ன காரணம்?

## சர்வதேச போர்க் களத்தில் இலங்கை

கொழும்பு, மார்ச். 08

சர்வதேச கடற்பரப்பில் நிலவும் போர் பதற்றங்களுக்கு மத்தியில், இலங்கை தான் அறியாமலேயே ஓர் ஆபத்தான சர்வதேச போர்க் களத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் கவலை வெளியிட்டுள்ளார். இதேவேளை, ஈரானின் போர்க்கப்பலை திருகோணமலையில் நிறுத்த என்ன காரணம் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் உள்ள சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி இலங்கையின் வர்த்தகத்துக்கும் எதிர்காலத்துக்கும் ஆழமான மற்றும் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

அண்மையில் அமெரிக்காவின் தாக்குதலுக்கு உள்ளானதாக கூறப்படும் மூன்று ஈரானிய போர்க்கப்பல்களில் ஒன்று மூழ்கடிக்கப்பட்ட விவகாரம் குறித்துப் பேசிய அவர், இந்தச் சம்பவம் நடப்பதற்கு 12 மணித்தியாலங்களுக்கு முன்னதாகவே குறித்த கப்பல் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவதற்கு அனுமதி கோரியிருந்ததாக சுட்டிக்காட்டினார். எமது நீர்ப்பரப்புக்குள் வருவதற்கு அனுமதி கோரப்பட்டபோது ஏன் அது வழங்கப்படவில்லை அல்லது தாமதிக்கப்பட்டது என்பது குறித்து கேள்வி எழுப்பிய அவர், தாக்குதல் இடம்பெற்ற பின்னர் மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்ய முன்வந்த அரசாங்கத்தின் திடீர் மனமாற்றம் எதனை உணர்த்துகிறது என்றும் வினவினார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் போர்க்கப்பல் விவகாரத்தில் இந்தியாவை குற்றம்சாட்டக்கூடாது

## செல்வம் எம்.பி. வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச்.08

இலங்கைக்கு அருகே ஈரான் போர்க்கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில் இந்தியாவை குற்றம் சாட்டக்கூடாது. அவ்வாறு குற்றம்சாட்டுவது தவறானது. இலங்கை நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது கரம் கொடுக்க இந்தியா தான் முன்வரும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர கால சட்டம் அமுலாக்கம் நீடிப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விடயத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழு ஆதரவையும் வழங்குவோம். குண்டுத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

தற்போது நடக்கும் போர்ச் சூழல் தொடர்பில் பலரும் பல்வேறு கருத்துக்களை கூறுகின்றனர். எமது நாட்டில் நடந்த போரில் எமது மக்கள் பாதிக்கப்பட்டதன் வேதனையை நாங்கள் அறிவோம். இதனால் போர்களை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை - என்றார். (எ)

# வலுசக்தி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, மார்ச். 08

வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தமது கட்சி ஏகமனதாக எடுத்த தீர்மானத்துக்கு அமைய இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

“ஊழல் எதிர்ப்பு ஆணைக் குழுவினால் அமைச்சருக்கு எதிராக ஏற்கனவே கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை மற்றும் நிலக்கரி கொள்வனவு செயல்முறையை சரியாக நிர்வகிக்கத் தவறியமை ஆகிய இரண்டு காரணிகளின் அடிப்படையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் எதிர்க்கட்சியில் செயல்படும் ஏனைய குழுக்களுடனும் கலந்துரையாடி, பரந்தளவிலான ஆதரவைப் பெற்றுக்கொள்ள நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

அதேபோல், அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு தமது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் எமக்கு ஆதரவு வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.”- என்றார். (எ)

# மத்திய கிழக்கு போர்ச் சூழல்நிலையால் சிவில் விமானப் போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு, மார்ச் 08

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, அப்பகுதிக்கான சிவில் விமானப் போக்குவரத்து சேவைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கான விமான சேவைகள் வழமை போன்று இயங்குமா என்பதில் இன்னும் நிச்சயமற்ற நிலை நீடிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்று முன்தினம் டுபாய் மற்றும் மஸ்கட் நகரங்களில் இருந்து 10 விமானங்கள் மூலம் ஆயிரத்து 313 பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

அதே காலப்பகுதியில், 667 பயணிகளுடன் 10 விமானங்கள் இலங்கையிலிருந்து டுபாய் மற்றும் மஸ்கட் நகரங்களை நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# வெளிநாட்டு தொழிலாளர்களால் 729 மில்லியன் அமெரிக்க டொலர்

## பெப்ரவரி மாதத்தில் மட்டும் கிடைத்தது

கொழும்பு, மார்ச். 08

2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர்களால் 729 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நாட்டுக்குக் கிடைத்த வெளிநாட்டுப் பணப்பரிமாற்றத்தின் அளவு 548.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியிருந்தது.

இதன்படி, 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றமானது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 180.9 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும், 2026 ஜனவரி மாதத்தில் 751.1 மில்லியன் டொலர் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம் நாட்டுக்குக் கிடைத்திருந்ததுடன், பெப்ரவரி மாதத்தில் அதில் சிறிய அளவிலான வீழ்ச்சி காணப்படுகிறது.

இதேவேளை, 2026 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் பெப்ரவரி வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களால் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ள மொத்தப் பணப்பரிமாற்றத்தின் அளவு 1.48 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ)

# ஏப்ரல் முதல் களமிறங்கும் மொட்டு: மகிந்த தலைமையில் விசேட கூட்டம்

கொழும்பு, மார்ச். 08

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை மற்றும் செயல்குழுவின் விசேட கூட்டங்கள் நேற்று முன்தினம் பத்தரமுல்ல, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றன.

தற்போதைய அரசியல் சூழலில் கட்சியின் எதிர்கால நகர்வுகள் மற்றும் தேர்தல் வியூகங்கள் குறித்து ஆராயும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் நாடு தழுவிய ரீதியில் கட்சியை மறுசீரமைக்கும் பாரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார். (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 520 பேர் கைது

கொழும்பு, மார்ச். 08

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 520 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 27, 890 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 11 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 276 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 176 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 231 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 58 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,359 பேர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வடக்கு இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு எச்சரிக்கை

டெல்அவிவ், மார்ச். 08

மோதல் நிலைமை காரணமாக, இஸ்ரேலின் வடக்கு பிராந்தியத்தில் பணிபுரியும் இலங்கையர்கள் தமது பாதுகாப்பு குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேலின் வடக்கு பிராந்தியத்தை இலக்கு வைத்து ஹிஸ்புல்லா அமைப்பினால் நடத்தப்படும் ஏவுகணை தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போது ஈரானில் இருந்து முன்னெடுக்கப்படும் தாக்குதல்களில் குறைவு காணப்படுவதாக அவர் கூறினார்.

வடக்கு இஸ்ரேல் பிராந்தியத்தில் 9,000இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பணிபுரிந்து வருவதால், அந்நாட்டு பாதுகாப்புப் படைகள், அரச ஊடகங்கள் வழங்கும் அறிவுறுத்தல்களை தொடர்ந்து பின்பற்றுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# விமானப் பயணங்கள் தடை; சுற்றுலா பயணிகள் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 08

விமானப் போக்குவரத்துத் தடைகள் காரணமாக இலங்கையில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அதன் தலைவர் புத்திக ஹேவவசம், விமானப் பயணங்கள் தடைப்பட்டமையால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் காலை மற்றும் மதிய உணவை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (அ)

# பேராதனை பல்கலை வளாகத்திற்குள் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 08

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதையடுத்து, மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக ஹந்தானை மலைப்பகுதியை ஒட்டியுள்ள பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான கால்நடை போதனா பண்ணை மற்றும் பணியாளர் மேம்பாட்டு மையம் ஆகியவற்றைச் சூழவுள்ள பகுதிகளில் சிறுத்தைகள் அடிக்கடி நடமாடுவது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் குறித்த பகுதிகளுக்குச் செல்பவர்கள் மற்றும் அங்குள்ள குடியிருப்பாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# மன்னாரில் திருட்டு: 4 பெண்கள் கைது

மன்னார், மார்ச். 08

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் 50 வீட்டுத் திட்டப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்ற திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான பெண் உட்பட நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பெருந்தொகை பணத்தையும் மன்னார் பொலிஸார் மீட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜா-எல பகுதியில் நேற்று அதிகாலை மூன்று வீடுகள் மீது துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, மார்ச். 08

நேற்று அதிகாலை ஜா-எல பகுதியில் பட்டுவத்தே சாமர வின் மனைவியின் வீட்டின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பில் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, துப்பாக்கிதாரிகள் குறித்த வீட்டின் அருகில் உள்ள மேலும் இரண்டு வீடுகளின் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

நேற்று அதிகாலை 1:25 மணியளவில் ஜா-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிகம்பிட்டிய, புனித ஆனா வீதி, இலக்கம் 05 இல் அமைந்துள்ள வீட்டை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பட்டுவத்தே சாமர என்ற மனோஜ் சரங்க லியனகே என்பவரின் மனைவியான சதுரிகா வீரசூரிய வசித்து வந்த வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு சந்தேக நபர்கள் ரி- 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த வீட்டின் மீதும் ஏனைய இரண்டு வீடுகளின் மீதும் சுமார் 23 தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பட்டுவத்தே சாமரவின் மனைவி தற்போது டுபாயில் வசித்து வருவதுடன், இந்த வீடு கடந்த 2 மாதங்களாக முதியோர் இல்லம் நடத்துவதற்காக மாதம் 125, 000 ரூபாய் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடந்த சமயத்தில் அந்த வீட்டில் 9 முதியவர்களும் 4 தாதியர்களும் இருந்துள்ளனர்.

இதேவேளை, குறித்த வீட்டின் மீது கடந்த 2025.12.15 மற்றும் 2025.12.24 ஆகிய திகதிகளிலும் இதேபோன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அக்குரேகொட இரட்டைக்கொலை: உடந்தையாக இருந்த இருவர் கைது

கொழும்பு, மார்ச். 08

தலங்கம, அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த மேலும் இரு சந்தேக நபர்களை மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

குறித்த குற்றச் செயலின் பின்னர், துப்பாக்கிச் சூடு நடத்திய வர்களில் ஒருவரை பேருந்து மூலம் மொனராகலை பகுதிக்கு அழைத்துச் சென்றமை மற்றும் குற்றத்துக்கு உடந்தையாக இருந்தமை தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 39 மற்றும் 53 வயதுடைய இப்பாகமுவ மற்றும் மாகொல பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது வெளிநாட்டில் வசிக்கும் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவரினால் வழங்கப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பேருந்து ஒன்றின் மூலமே சந்தேக நபர் ஒருவரால் துப்பாக்கிதாரி அழைத்துச் செல்லப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

நாம் விரும்பாத நிலையிலும்

# ஒருவித போர் சூழலுக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது

கொழும்பு, மார்ச். 08

நாம் விரும்பாத ஒரு சூழலுக்கு மத்தியிலும், நாடு ஒருவித போர் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சமீபத்திய வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு பயங்கரமான செயல்முறையை வேடிக்கை பார்ப்பவர்களாக நாம் மாறியுள்ளோம் என்றும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், யார் எப்போது எவ்வாறு பாதிக்கப்பட்டவர்களாக மாறுவார்கள் என்பதை எதிர்வு கூற முடியாத ஒரு நிலைமை உருவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் காலி கடற்பரப்பில் விபத்துக்குள்ளான ஈரான் கப்பல் சம்பவம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

கராப்பிட்டிய மருத்துவமனைக்கு திடீரென ஏற்க நேரிட்ட பொறுப்பைப் போன்ற ஏனைய பொறுப்புகளை யார், எப்போது, எவ்வாறு ஏற்க நேரிடும் என்பதை எம்மால் ஊகிக்க முடியாது.

இவ்வாறானதொரு நிலைமை எமது நாட்டின் பொதுமக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை எம்மால் முன்கூட்டியே கணிக்க முடியாது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் கராப்பிட்டிய மருத்துவமனை இந்த யுத்தத்தினால் சடலங்களால் நிரம்புவதற்கு ஒரு நாளே போதுமானதாக இருந்தது. இதனால்தான் நாம் தயாராக இருக்க வேண்டும். இதனால்தான் நாம் முன்னெச்சரிக்கை பாதுகாப்பு உபாயங்களைப் பயன்படுத்த வேண்டும். அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் எமக்கு 'அயர்ன் டோம்' பாதுகாப்பு கவசம் கிடைத்துவிடப் போவதில்லை. ஆனால், எம்மால் முடிந்தவரை தயாராவதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கும்.- என்றார். (எ)

# சுற்றுலாத்துறை குறித்து போலிச் செய்திகள்!

அவுஸ்திரேலியா விளக்கம்

கொழும்பு, மார்ச். 08

அவுஸ்திரேலியர்களுக்கு இலங்கை ஒரு அதிக அபாயகரமான சுற்றுலாத் தலமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்று வெளியாகும் செய்திகளை கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் நிராகரித்துள்ளது.

இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் உத்தியோகபூர்வ சுற்றுலா அறிவுறுத்தல் மட்டத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

துல்லியமான மற்றும் புதுப்பிக்கப்பட்ட சுற்றுலா ஆலோசனைகளுக்கு உத்தியோகபூர்வ 'ஸ்மார்ட்ராவலர்' இணையத்தளத்தை மாத்திரம் நம்பியிருக்குமாறு அவுஸ்திரேலியப் பிரஜைகளிடம் அந்த அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

சமூக ஊடகங்களில் பரவி வரும் சில செய்திகள், இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் சுற்றுலா அறிவுறுத்தல்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக தவறான தகவல்களைப் பரப்புவதாக உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

# வறட்சியான வானிலை நிலவக்கூடும்

கொழும்பு, மார்ச். 08

நாடு முழுவதும் பிரதானமாக வறட்சியான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என்று அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# லொறி மோதி பாதசாரி பலி

கொழும்பு, மார்ச். 08

கந்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

கொழும்பு நோக்கி பயணித்த லொறி ஒன்று, வீதியைக் கடக்க முயன்ற பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. (எ)

# கடலில் அடித்து செல்லப்பட்ட ரஷ்ய பயணிகள் இருவர் மீட்பு

காலி, மார்ச். 08

ஹிக்கடுவை துறைமுகத்துக்கு அருகிலுள்ள கடலில் நீராடச் சென்று, கடல் அலையில் அடித்துச்செல்லப்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பதிவானது.

கடற்கரையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ஹிக்கடுவை பொலிஸ் உயிர் காப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் உடனடியாக செயல்பட்டு அவர்களை மீட்டனர்.

மீட்கப்பட்டவர்கள் 39 மற்றும் 40 வயதுடையவர்கள் எனவும் இருவரும் ரஷ்ய நாட்டுப் பிரஜைகள் எனவும் தெரியவந்துள்ளது. (எ)

# அரசாங்கம் ஒப்பந்தத்தை பகிரங்கப்படுத்த வேண்டும்

சுஜீவ சேனசிங்க கோரிக்கை

கொழும்பு, மார்ச். 08



அமெரிக்காவுடன் கைச்சாத்திட்ட பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும். அமெரிக்காவின் செயல்பாடுகள் இலங்கைக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசரகால சட்டம் அமுலாக்கம் நீடிப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# சர்வதேச சந்தையில் எகிறிய மசகு எண்ணெய் விலை

கொழும்பு, மார்ச். 08

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, பிரெண்ட் வகை மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. தற்போது அதன் பெறுமதி 93 அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் எண்ணெய் விலை இவ்வளவு உயர்வடைந்தது இதுவே முதல் முறையாகும்.

இதற்கு முன்னர், 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் - நவம்பர் காலப்பகுதியில் மசகு எண்ணெய் விலை இவ்வாறு உயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.03.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# இலங்கையும் ஈரான் போரும்

தேசிய மக்கள் சக்தி அதன் ஒன்றரை வருட பதவிக்காலத்தில் சர்வதேச உறவுகளை எந்த விதமான சர்ச்சைக்கும் உள்ளாகாத வகையில் கையாண்டு வருகிறது.

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுக்கு எதிரான கடுமையான நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் தலைவர்கள் பரவலாக எதிர்பார்க்கப்பட்டதற்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் அந்த நாடுகளுடனான உறவுகளை மாத்திரமல்ல, ஆசியாவின் இரு பெரும் நாடுகளுடனான இந்தியா மற்றும் சீனாவுடனும உறவுகளைச் சமநிலையுடன் பேணி வந்திருக்கிறது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடுத்திருக்கும் போரில் இடையில் அகப்பட்டுவிடாமல் இருப்பதிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கையில். இரு ஈரானிய போர்க் கப்பல்களின் வடிவில் முற்றிலும் எதிர்பாராத பிரச்னை ஒன்று வந்து சேர்ந்திருக்கிறது.

கடந்த வாரம் தென்னிந்தியாவில் சர்வதேச கடற்படைப் பயிற்சியில் பங்கேற்று விட்டு நாடுதிரும்பும் வழியில் ஈரானியப் போர்க்கப்பல் ஒன்று தென்னிலங்கை கரையோரத்தில் இருந்து 40 மைல்கள் தொலைவில் அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதலில் மூழ்கியது. அந்த தாக்குதலில் இறந்தவர்களின் சடலங்களையும் உயிர் தப்பியவர்களையும் இலங்கை கடற்படையினர் மீட்டு வந்தனர்.

கடற்பரப்பில் தத்தளித்த இன்னொரு ஈரானியப் போர்க் கப்பலில் இருந்தவர்களையும் இலங்கை கடற்படையினர் காப்பாற்றிக் கரைக்கு கொண்டுவந்தனர். இந்த இரண்டாவது கப்பலில் இருந்த 208 ஈரானிய கடற்படையினரும் முதல் கப்பலில் இருந்து மீட்கப்பட்டவர்களும்ா தற்போது இலங்கையின் பாதுகாப்பில் இருக்கிறார்கள்.

இவர்களை ஈரானுக்கு திருப்பியனுப்புவதற்கான வழிவகைகளை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருந்த நிலையில், இரு கப்பல்களில் இருந்தும் உயிருடன் மீட்கப்பட்டவர்களை ஈரானுக்கு திருப்பியனுப்ப வேண்டாம் என்று அமெரிக்கா இலங்கைக்கு நெருக்குதலைக் கொடுப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் கேபிள் ஒன்றை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் சர்வதேச செய்திச் சேவை நேற்றைய தினம் அறிவித்திருக்கிறது.

கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்தின் பொறுப்பதிகாரியான ஜய்ன் ஹோவெல் இலங்கை அரசாங்கத்திடம் ஈரானியர்களை அவர்களது நாட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்று வலியுறுத்தியிருப்பதாகவும் ஈரான் இந்த கப்பல்கள் விவகாரத்தைப் பயன்படுத்தி பிரசாரங்களைச் செய்வதற்கான வாய்ப்புக்களை சாத்தியமானளவு குறைக்குமாறு இலங்கையிடம் அமெரிக்கா கேட்டிருப்பதாகவும் ராய்ட்டர்ஸ் செய்தியில் கூறப்பட்டிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டியிருக்கும் முதலாவது வெளிவிவகார நெருக்கடி இதுவாகும். எந்த நேரத்தில் எவ்வாறு நடந்து கொள்வார் என்று கூறமுடியாத பேர்வழியான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிருவாகத்துடன் ஜனாதிபதி திசநாயக்கவின் அரசாங்கம் இந்த நெருக்கடியை கையாளுவது என்பது உண்மையில் பெரும் சிக்கலானதேயாகும்.

இரு ஈரானியக் கப்பல்களில் இருந்தவர்களையும் மனிதாபிமான அடிப்படையில் இலங்கை. கடற்படையினர் மீட்டுக்கொண்டு வந்ததையும் துணிச்சலுடன் அரசாங்கம் இந்த விவகாரத்தைக் கையாண்டதையும் குறித்து பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அமெரிக்காவின் நெருக்குதல் வந்து சேர்ந்திருக்கிறது.

அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரத்துக்கு இந்த நெருக்கடியைப் பயன்படுத்துவதில் வக்கிரத்தனமான நாட்டத்தைக் காட்டாமல் எதிர்க்கட்சிகள் மத்திய கிழக்குப் போருக்குள் இலங்கை அகப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

# சரியான நேரம் சீரமைப்பு செய்திருப்பின் பொருளாதார சரிவைத் தடுத்திருக்கலாம்!

## மத்திய வங்கியின் ஆளுநர் கருத்து

*கொழும்பு, மார்ச் 08*

இலங்கை சந்தித்த பொருளாதார சரிவு என்பது தவிர்க்க முடியாதது அல்ல எனவும், சரியான நேரத்தில் சீர்திருத்தங்களை மேற்கொண்டிருந்தால் இத்தகையதொரு பேரழிவைத் தடுத்திருக்க முடியும் எனவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை குறித்த வெளிப்படையான மதிப்பீட்டை வழங்கிய ஆளுநர், "இந்தச் சீர்திருத்தத் திட்டத்தை நாம் ஓராண்டுக்கு முன்பே நடைமுறைப்படுத்தி யிருந்தால், இத்தகையதொரு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருக்க மாட்டோம்.

அப்படியொரு நெருக்கடி பற்றி எவரும் பேசியிருக்க மாட்டார்கள் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னாள் அரசியல் நிர்வாகம், பொருளாதார நெருக்கடியின் ஆரம்ப அறிகுறிகளைப் புறக்கணித்ததாக குற்றம்சாட்டிய அவர், பிரச்னைகளின் ஆணிவேரை கண்டறிந்து தீர்ப்பதற்குப் பதிலாக, அரசியல் தலைமை உண்மைகளை மறைக்க முயன்றது எனச் சாடினார்.

நீண்டகாலப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளாமல், குறுகிய காலப் பிரச்னைகளைத் தீர்க்கும் தற்காலிக "ஒட்டு வேலைகளில்" மட்டுமே கவனம் செலுத்தப்பட்டது எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் அனுபவத்திலிருந்து மற்ற நாடுகள் கற்றுக்கொள்ளவேண்டிய முக்கியமான பாடங்கள் குறித்து கருத்து வெளியிட்ட ஆளுநர், பொருளாதாரப் பிரச்னைகளின் ஆரம்ப அறிகுறிகளை உணர்ந்து, அவற்றை மறுக்காமல் நேர்மையாக அணுகவேண்டும் என குறிப்பிட்டார். (அ)

# சுரேஷ் சாலே தடுத்து வைப்பு; அவரது மனைவி கடும் கவலை

*கொழும்பு, மார்ச் 08*

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயின் தடுத்து வைப்பு முறைகள் குறித்து அவரது மனைவி எஸ்.பி.எம்.எஸ்.பி. சாலே கடும் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில், தனது கணவரை குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகள் சந்திப்பதற்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும், வீட்டிலிருந்து உணவு வழங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மகனுக்கான நற்சான்றிதழ் பத்திரம் பொலிஸாரால் வழங்கப்படாததால், அவர் தனது தந்தையைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சுரேஷ் சாலே சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணையின்போது, சாலே தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து நீதிமன்றத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், அவர் இன்னும் எந்த வழக்கிலும் சந்தேகநபராகப் பெயரிடப்படவில்லை என குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பு உத்தரவின் சான்றளிக்கப்பட்ட பிரதி 48 மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறை மீறப்பட்டுள்ளதாக அவரது மனைவி சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# இந்திய பாய்மர பயிற்சி கப்பல் கொழும்புத் துறைமுகம் வந்தது

*கொழும்பு, மார்ச் 08*

இலங்கை கடற்படையைச் சேர்ந்த பயிற்சி அதிகாரிகளுக்கு துறைமுக மட்ட மற்றும் கடல் மட்ட பயிற்சிகள். கப்பலோட்டல் பயிற்சி மற்றும் அனுபவ பகிர்வுகள் உள்ளிட்டவற்றை இலக்காகக் கொண்டு கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்துக்கு சென்றிருந்த இந்தியக் கடற்படை க்கு சொந்தமான பாய்மர பயிற்சிக் கப்பலான ஐ.என்.எஸ். தரங்கினி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இலங்கை கடற்படையினருக்கு இக்கப்பலின் அதிகாரிகளால் நாளை வரை விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. விசாகபட்டினத்தில் நடைபெற்ற சர்தேச கடற்படை மீளாய்வு 2026இல் பங்கேற்ற நிலையில் அதன் நிறைவில் இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கொமாண்டர் நிதின் கஜ்ஜார் கட்டளையின் கீழ் குறித்த கப்பல் வழிநடத்தப்படுகின்றது.

இயந்திரங்கள் மற்றும் எரிவாயு மூலம் இயக்கப்படும் கப்பல்கள் நிறைந்த இந்த நவீன யுகத்தில் பாய்மரப் பயிற்சிக் கப்பல்களை இயக்கும் உலகின் சில கடற் படைகளில் இந்தியக் கடற்படையும் ஒன்றாக உள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமத்துவ அறம்

வழக்குரைஞர்
ஆர். சங்கீதா

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவப் பேராசானின் ஈரடிப் பிரகடனமே உலக சமூக நீதியின் ஆதி வேர். மானுடப் பரப்பில் பிறப்பால் எந்தவித உயர்வு தாழ்வும் இல்லை என்பதை உரக்கச் சொன்ன அந்த அறச்சீற்றமே, இன்று நவீன உலகின் சமத்துவக் கோட்பாடாக விரிந்து நிற்கிறது.


பிப்ரவரி 20-ஆம் தேதியை உலக சமூக நீதி தினமாக ஐக்கிய நாடுகள் சபை கடந்த 2007-ஆம் ஆண்டு அறிவித்தபோது, அதன் நோக்கம் வறுமை ஒழிப்பு மற்றும் பாலினச் சமத்துவமாக மட்டுமே இருந்தது. ஆனால், 2026-ன் நவீனச் சூழலில், சமூக நீதி என்பது வெறும் பொருளாதாரப் பங்கீடு மட்டுமல்ல் அது அதிகாரப் பகிர்வு, எண்ம (டிஜிட்டல்) சமத்துவம் மற்றும் சூழலியல் சார்ந்த நீதியாகவும் பரிணமித்துள்ளது.

சமூக நீதி என்பது பலவீனமானவர்களுக்குச் செய்யப்படும் கருணையல்ல. அது வலிமையானவர்கள் ஆக்கிரமித்துள்ள இடத்தைச் சமன்படுத்தும் ஓர் அறப் போராட்டம்.

இணைய வசதியும் தொழில்நுட்ப அறிவும் ஒரு பிரிவினருக்கு மட்டுமே கிடைப்பது சமூகப் பிளவை அதிகப்படுத்துகிறது. சர்வதேசத் தொலைத்தொடர்பு மையத்தின் தரவுப்படி, உலகின் 33 சதவீத மக்களுக்கு (சுமார் 266 கோடி பேர்) இன்றும் இணைய வசதி இல்லை. கல்வியும் வேலைவாய்ப்பும் முற்றிலுமாக இணையத்தைச் சார்ந்துள்ள நிலையில், இந்த வசதி மறுக்கப்படுவது மிகப் பெரிய சமூக அநீதியாகும்.

இந்தத் தொழில்நுட்பக் குறைபாட்டை நிரப்பி, அனைவருக்கும் அறிவுசார் வாய்ப்புகளை வழங்குவதே இன்றைய காலத்தின் முதன்மையான சமூக நீதிப் பணியாகும். காலநிலை மாற்றம் என்பது வெறும் புவியியல் மாற்றம் மட்டுமல்ல, அது ஒரு சமூகப் பொருளாதாரப் பிரச்னை. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் செல்வந்தர்களை விட ஏழைகளையே 75 சதவீதம் அதிகம் தாக்குகின்றன.

நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்படுவதும், காடுகள் அழிக்கப்படுவதும் நேரடியாகப் ஒரு பகுதி மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கின்றன. இயற்கை வளங்களை அனுபவிப்பதில் அனைவருக்கும் சமமான உரிமை வேண்டும் என்பதே நவீன சமூக நீதியின் குரல்.



நிலமும் நீரும் காற்றும் சிலரின் லாபத்துக்காக சுரண்டப்படாமல், அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதாக இருப்பதே உண்மையான சூழலியல் நீதி. சமூக நீதி ஏன் இன்றும் எட்டாக்கனி யாக இருக்கிறது என்பதற்கு சமீபத்திய புள்ளிவிவரங்கள் சான்றளிக்கின்றன.

ஆக்ஸ்பாம் அறிக்கையின்படி, உலகின் மிகப் பெரும் ஒரு சதவீத செல்வந்தர்கள், கடந்த இரண்டு ஆண்டுகளில் உருவான புதிய செல்வத்தில் 63 சதவீதத்தை ஈட்டியுள்ளனர். இந்தியாவில் ஒரு சதவீத மக்கள் நாட்டின் மொத்த செல்வத்தில் சுமார் 40 சதவீதத்தைக் கொண்டுள்ளனர். உலக வங்கியின் புள்ளிவிவரப்படி, சுமார் 70 கோடி மக்கள் இன்றும் கடும் வறுமையில் வாழ்கின்றனர்.

உலகப் பொருளாதார மன்றத்தின் கணிப்புப்படி, தற்போதைய வேகத்தில் சென்றால் ஆண்-பெண் இடையிலான ஊதிய இடைவெளியைக் குறைக்க இன்னும் 131 ஆண்டுகள் ஆகும். இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சமூகப் படிநிலையின் அடிமட்டத்தில் இருக்கும் மக்களின் கனவுகளைச்சிதைக்கின்றன. சமூக நீதியின் மற்றொரு முகம் பாலினச் சமத்துவம். வீட்டின் சமையல் அறையிலிருந்து நாட்டின் நாடாளுமன்றம் வரை பெண்கள் எதிர்கொள்ளும் கண்ணுக்குத் தெரியாத தடைகளை உடைப்பதே உண்மையான நீதி.

உலகெங்கிலும் உள்ள நாடாளுமன்றப் பிரதிநிதிகளில் வெறும் 26.5 சதவீதத்தினர் மட்டுமே பெண்கள் என்பது சமத்துவமின்மையின் சாட்சி. வேலைக்குச் செல்லும் பெண்களுக்குச் சமமான ஊதியம், பாதுகாப்பு மற்றும் முடிவெடுக்கும் அதிகாரத்தில் சம பங்கு என்பதே நவீனப் பெண்ணியச் சமூக நீதி. சமூக நீதி என்பது சட்டங்களால் மட்டுமே சாத்தியமாகி விடாது.

'பசியால் வாடும் ஒரு மனிதன் இருக்கும் வரை உலகம் சுதந்திரமானது என்று சொல்ல முடியாது" என்ற மகாத்மா காந்தியின் வரிகள் இன்றும் உலக மனச்சாட்சியை உறுத்திக்கொண்டே இருக்கின்றன. இது தனி மனிதனின் மனமாற்றத்தில் தொடங்க வேண்டும்.

மற்றவரின் உரிமையை மதிப்பதும், சக மனிதனை தன் நிலையிலிருந்து உயர்த்துவதும் ஒவ்வொரு குடிமகனின் தார்மிகக் கடமையாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் உலகளாவிய சகோதரத்துவமே சமூக நீதியின் உச்சபட்ச இலக்கு. அரசு, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சமூகம் என அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே, 'யாவர்க்கும் எல்லாம்" என்ற சமத்துவ சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும்.

இன்றைய நாளில் வெறும் உறுதிமொழிகளோடு நின்றுவிடாமல், ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை நோக்கி ஒரு சிறிய அடியையாவது எடுத்து வைப்பதே இந்த உலக சமூக நீதி தினத்தை (பிப்.20) கடைப்பிடிப்பதன் உண்மையான வெற்றியாகும்.

(தினமணி)

# இந்தவார ராசிபலன் 08.03.2026 - 14.03.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 24
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பஞ்சமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் கொஞ்சம் அழுத்தமான நிலை உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு கிடைக்கலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சீக்கிரமாகவே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பணப்புழக்கம் அதிகரிக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக நல்ல பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சிரமமான நிலை உண்டாகும். சில இடங்களில் சுறுசுறுப்பாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாறுதல் வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தடுமாற்றமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை அதிகரிக்கும். புதிய தொழிலில் தைரியத்தோடு ஈடுபடலாம். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் மன நிம்மதியும் உண்டாகும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு அழுத்தம் உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் அதிர்ஷ்டகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும் , சில இடங்களில் சுறுசுறுப்பாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சுணக்கமாக நடக்கும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சங்கடங்கள் உண்டாகும். சில இடங்களில் பொறுப்பாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் விரைவாக நடக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரித்து உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபட லாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் நிம்மதி உண்டாகும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும், சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் மதிப்பு உயரும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். மகிழ்ச்சியும் உண்டாகும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சிக்கல் இருக்கும். சில இடங்களில் உழைப்பு அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாகும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பண இருப்பு உயரும். புதிய முயற்சிகளில் விரும்பி ஈடுபடலாம். குதூகலம் கொண்டாட்டம் அதிகரிக்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் இருக்கும் , சில இடங்களில் உழைப்பு அதிகம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நடந்து மன மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வங்கி இருப்பு உயரும். புதிய முயற்சிகளில் நம்பி ஈடுபடலாம். பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால்கள் இருக்கும் , சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி பண வரவு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு நீங்கி சந்தோசம் உண்டாகும். பிள்ளைகளால் குதூகலம் அதிகரிக்கும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காகும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போராட்டம் இருக்கும் இருக்கும். சில இடங்களில் சவால்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு உயரும். புதிய முயற்சிகளில் நம்பி இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனக் குழப்பம் நீங்கும். பிள்ளைகளால் எந்த தொந்தரவும் இருக்காது.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் ஏமாற்றம் இருக்கும். சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகமாக இருக்கும். புதிய முயற்சிகளுக்கு நல்ல வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த மனக்கசப்பு நீங்கும். பிள்ளைகளால் சில பிரச்சனைகள் முடிவுக்கு வரும். அலுவலகத்தில் அக்கறையோடு வேலை பார்ப்பீர்கள். ஊழியர்களின் ஒத்துழைப்பு இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய 'நாஜிகளின்' சர்வதேச காடைத்தனத்தை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் உலக நாடுகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

மத்திய கிழக்கில் ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்திவரும் போர் மத்திய கிழக்கைச் சூழ்ந்துகொண்டிருப்பது மாத்திரமல்ல, இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கும் பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

தென்னிந்தியாவின் விசாகபட்டினத்தில் சர்வதேச கடற்படைப் பயிற்சிகளில் பங்கேற்ற பின்னர் நாடு திரும்பிக் கொண்டிருந்த ஈரானிய போர்க்கப்பல் ஒன்று கடந்த வாரம் மத்திய கிழக்கில் இருந்து 2000 மைல்கள் தொலைவில் இந்து சமுத்திரத்தில் இலங்கையின் தென்கரையோரத்தில் இருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு ஈரானியக் கப்பலை இலங்கை கடற்படை மனிதாபிமான அடிப்படையில் துறைமுகத்துக்கு கொண்டு வந்திருக்கிறது.

அண்மைய தசாப்தங்களில் வெள்ளை மாளிகையில் பதவியில் இருந்த ஜனாதிபதிகளில் படுமோசமான போர் வெறியராக விளங்கும் டொனால்ட் ட்ரம்பும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் இனப்படுகொலைச் சந்தேகநபராக அறிவிக்கப்பட்ட இஸ்ரேலிய பிரதமர் நெதான்யாகுவும் ஈரானுக்கு எதிராக விரைவாகப் போரைத் தொடங்கியிருக்கலாம். ஆனால், அந்தப் போருக்கு விரைவான முடிவு கிட்டப்போவதில்லை.

போர் தொடங்கிய முதல்நாளன்றே ஈரானின் அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா அலி காமெனி குண்டுவீச்சில் கொல்லப்பட்டது குறித்து கொண்டாடிக் கொண்டிருக்கும் ட்ரம்ப், ஈரானின் அடுத்த ஆன்மீகத் தலைவரைத் தெரிவு செய்வதில் தன்னை ஈடுபடுத்த வேண்டும் என்று அறிவித்திருக்கிறார். புதிய ஆன்மீகத் தலைவராக கொலையுண்ட தலைவரின் மகன் மொஜ்ராபா காமெனி தெரிவாவதை அனுமதிக்க முடியாது என்பதே ட்ரம்பின் நிலைப்பாடாக இருக்கிறது.

ஈரானில் அமையக்கூடிய அடுத்த அரசாங்கம் தனது பொம்மையாக இருப்பதை உறுதி செய்வதே அவரது நோக்கம். ஜனவரியில் வெனிசூலா ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவை அமெரிக்கப் படைகள் நியூயோர்க்கிற்கு கடத்திச் சென்றதைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட துணை ஜனாதிபதி டெல்சி றொட்றிகஸைப் போன்று வாஷிங்டனின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய ஒருவரை ஈரானில் பதவியில் அமர்த்துவதே ட்ரம்பின் திட்டம்.

அயத்தொல்லா காமெனியின் கொள்கைகளை பின்பற்றும் புதிய ஈரானியத் தலைவரை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் அறிவித்திருக்கிறார். ஆனால், அத்தகைய ஒரு கையாளை இன்றைய ஈரானிய அரசாங்கத் தலைவர்கள் மத்தியில் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

அயத்தொல்லா காமெனியின் மறைவையடுத்து ஈரானிய அரசு நிலை குலைந்து விடும் என்று எதிர்பார்த்த அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இதுவரையில் ஏமாற்றமே கிடைத்திருக்கிறது. மிலேச்சத்தனமான குண்டுவீச்சுக்களை நடத்தி ஈரானில் அழிவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ட்ரம்ப் அதேவேளை, அரசாங்கத்தைத் தூக்கியெறியுமாறு அந்த நாட்டு மக்களை கேட்கிறார்.

பாதுகாப்பு அமைச்சர் மற்றும் படைத்தளபதிகள் பலர் கொல்லப்பட்ட போதிலும், ஈரான் இஸ்ரேல் மீதும் அயல் அரபு நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைத்தளங்கள், சொத்துக்கள் மற்றும் தூதரகங்கள் மீது தொடர்ச்சியாக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆசியாவுக்கான வர்த்தகம் உட்பட உலகின் 20 சதவீதமான எண்ணெய் விநியோகத்துக்கு முக்கியமான தாக விளங்கும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது.

போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சில நாடுகள் மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக ஈரானிய ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியான் கடந்த வெள்ளிக்கிழமை கூறிய அதேவேளை ட்ரம்ப் ஈரான் நிபந்தனையற்ற முறையில் சரணடைய வேண்டும் என்று கூறினார். நிபந்தனையற்ற சரணாகதியைத் தவிர, ஈரானுடன் வேறு எந்த உடன்பாட்டுக்கும் இடமில்லை என்பது அவரது நிலைப்பாடு.

பாரிய தாக்குதல்களை நடத்துவதற்கு ஈரான் தீட்டிக் கொண்டிருந்த திட்டத்தை முறியடிப்பதற்காக முன்னெச்சரிக்கையாகவே தாக்குதல்களை தொடங்கியதாக கூறும் அமெரிக்காவும் இஸ்ரேலும் அவற்றின் குற்றச்சாட்டை நிரூபிக்க எந்தவொரு சான்றையும் உலகின் முன் வைக்கவில்லை.

கடந்த வருடம் ஜூனில் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களில் ஈரானின் சகல அணுவசதிக் கட்டமைப்புக்களும் நிர்மூலம் செய்யப்பட்டு விட்டதாகவும் அதற்குப் பிறகு ஈரான் எந்த அணுத் திட்டத்தையும் கொண்டிருக்க முடியாது என்று கூறிய ட்ரம்ப், ஈரான் அணுவாயுதங்களை தயாரிப்பதை தடுக்கவே தாக்குதல்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியிருந்ததாக குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பிரகாரம் எந்தவொரு நாடும் அதற்கெதிராக உடனடியாக மேற்கொள்ளப்படக்கூடிய தாக்குதலுக்கு எதிராக தற்காப்புக்கு படைபலத்தைப் பயன்படுத்துவது சட்டபூர்வமானது. அல்லாவிட்டால் பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரமே தாக்குதலை நடத்த முடியும். அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி போரைப் பிரகடனம் செய்வதற்கு காங்கிரஸின் அனுமதியைப் பெறவேண்டும். இந்த நிபந்தனைகளில் எந்தவொன்றையும் ட்ரம்ப் நிறைவேற்றவில்லை.



> உலக நாடுகள் ட்ரம்பின் போர்வெறிக்கு எதிராக அணிதிரள வேண்டிய நேரம் வந்துவிட்டது. தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் மனித குலத்தை அழிவை நோக்கி நகர்த்திச் செல்லும்.

ட்ரம்பின் போர் ஈரானை அழித்துக் கொண்டிருப்பது மாத்திரமல்ல இன்றைய பிரச்சினை. உலகின் உறுதிப்பாட்டுக்கு ஆதாரமாக இருக்கும் சட்ட முறைமைகள் சகலதையும் அவர் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கிறார். வெனிசூலாவின் இறைமையை மீறி மதுரோவை கடத்திச் சென்றது குறித்து கண்டனங்கள் கிளம்பியபோது சர்வதேச சட்டங்களைப் பற்றி தனக்கு கவலையில்லை என்றும் இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் உருவாக்கப்பட்ட உலக ஒழுங்கு (ஐக்கிய நாடுகள்) அமெரிக்காவுக்கு அநாவசியமான சுமையாக இருக்கிறது என்றும் அவர் கூறியது கவனிக்கத்தக்கது.

முன்னெச்சரிக்கையாக படைபலத்தைப் பயன்படுத்துவது என்பது வழமையானதாக்கப்பட்டுவிட்டால், எந்தவொரு அரசும் தனக்கு நீண்டகால நோக்கில் அச்சுறுத்தலாக அமையக் கூடியது என்று சந்தேகிக்கும் எந்தவொரு நாட்டின் மீதும் விரும்பிய நேரத்தில் படைபலத்தைப் பிரயோகிக்கக்கூடும். இது பேராபத்தான ஆயுதங்கள் புழக்கத்தில் இருக்கின்ற இன்றைய யுகத்தில் பயங்கரமான முன்னுதாரணமாகிவிடும்.
சட்டவிரோதமான போர்கள் சர்வசாதாரணமாகிவிடும்.

தற்போதைய உலகை பல்துருவமயப்பட்டது என்ற ஒரு மாயையில் நாம் வாழ்ந்திருக்கிறோம் என்று தோன்றுகிறது. அதாவது பல நாடுகள் பொருளாதார மற்றும் இராணுவ ரீதியில் ஒப்பீட்டளவில் பலம்பொருந்தியவையாக வளர்ந்துவிட்டதால் அமெரிக்கா போன்ற தனியொரு வல்லரசின் மேலாதிக்கத்தின் கீழானதாக உலக ஒழுங்கு இனிமேல் இருக்காது என்று நம்பினோம்.

எவ்வாறு, எந்த நேரத்தில் நடந்துகொள்வார் என்று முன்கூட்டியே கூறமுடியாத ட்ரம்பின் தலைமையின் கீழ் கடந்த ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாக சர்வதேச சட்டங்களை மதிக்காமல் அமெரிக்கா செய்து வருகின்ற அடாவடித்தனங்களுக்கு எதிராக எதையும் செய்ய முடியாதவையாக உலக நாடுகள் பரிதாபகரமான ஒரு நிலையில் இருக்கின்றன.

இருபதுகால இடைவெளியில் அமெரிக்கா சீனா



வின் நெருங்கிய இரு நேசநாடுகளில் ஆக்கிரமிப்பைச் செய்திருக்கிறது. வெனிசூலாவில் இருந்து மதுரோ கடத்திச் செல்லப்பட்டதையும் கடந்தவாரம் குண்டு வீச்சுக்களில் ஈரானிய ஆன்மீகத் தலைவர் கொல்லப்பட்டதையும் சர்வதேச சட்டமீறல் என்று கண்டனம் செய்யச் சீனாவினால் முடிந்ததே தவிர, வேறு எதையும் உருப்படியாகச் செய்ய முடியவில்லை. ரஷ்யாவின் நிலையும் அதுவே. இரு நாடுகளும் ஈரானுக்கு ஆதரவாக இராணுவ ரீதியான தலையீடுகளைச் செய்ய முடியாதவையாக இருக்கின்றன.

ஒரு வாரம் கடந்துவிட்ட நிலையிலும் கூட, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஈரானுக்கு எதிரான அமெரிக்க - இஸ்ரேலிய போரை கண்டனம் செய்ய முன்வரவில்லை. அயத்தொல்லா காமெனியின் மறைவுக்கு காலந்தாழ்த்தியே இந்தியா அனுதாபம் தெரிவித்திருக்கிறது. புதுடில்லியில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்குச் சென்ற இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி அனுதாபப் புத்தகத்தில் கைச்சாத்திட்டார்.

ஈரானியத் தூதரகங்களுக்குச் சென்று அனுதாபப் புத்தகங்களில் கைச்சாத்திட வேண்டாம் என்று உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களில் உள்ள இந்தியத் தூதுவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கின்ற அளவுக்கு அமெரிக்காவைப் புண்படுத்தக்கூடாது என்பதில் மோடி அரசாங்கம் கடுமையான கரிசனையுடன் இருக்கிறது.

இலங்கையின் கரையோரத்துக்கு அப்பால் ஈரானியப் போர்க்கப்பல் அமெரிக்க நீர்மூழ்கியினால் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் இந்து சமுத்திரத்தில் செல்வாக்கைச் செலுத்துவதில் இந்தியாவுக்கு இருக்கும் வல்லமை குறித்து கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

கடற்படைப் பயிற்சிகளில் பங்கேற்ற ஈரானியப் போர்க்கப்பல் விசாகபட்டினத்தில் இருந்து புறப்பட்ட நேரத்தில் இருந்து அதை அமெரிக்க நீர்மூழ்கி கண்காணித்துக் கொண்டிருந்தது என்பது தெளிவானது. தனது செல்வாக்குப் பிராந்தியம் என்று இந்தியா உரிமை கோருகின்ற - கிரமமாக இந்தியக் கடற்படை ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கடற்பிராந்தியத்தில் வெளிநாட்டு நீர்மூழ்கி ஒன்றின் பிரசன்னத்தை கண்டுபிடிக்கவும் தனது அழைப்பின் பேரில் பயிற்சிக்கு வந்த நேசநாடொன்றின் போர்க்கப்பலின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்தியாவினால் இயலவில்லை என்பது கோடிப்புறத்தில் இந்தியாவின் அதிகாரம் தொடர்பில் அசௌகரியமான கேள்விகளைக் கிளப்புகிறது.

இது இவ்வாறிருக்க, கிறீன்லாந்து தீவை அமெரிக்காவுக்குச் சொந்தமாக்கப் போவதாகவும் அதற்காக தேவையானால் படைபலத்தைப் பிரயோகிக்கவும் தயங்கப்போவதில்லை என்றும் ட்ரம்ப் அச்சுறுத்தியபோது அவர் சர்வதேச சட்டங்களை அவமதிக்கிறார் என்று குற்றஞ்சாட்டிய ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் தலைவர்கள் ஈரான் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்யவோ அல்லது ஆன்மீகத் தலைவர் கொல்லப்பட்டதற்கு அனுதாபம் தெரிவிக்கவோ முன்வரவில்லை.

இன்றைய 'நாஜி" களான ட்ரம்பும் நெதான்யாகுவும் செய்யும் சர்வதேச காடைத்தனத்துக்கு எதிராக எதையும் செய்ய முடியாமல் உலக நாடுகள் பரிதாபகரமாக கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் முற்றுமுழுதாக இஸ்ரேலின் நலன்களினால் வடிவமைக்கப்படக்கூடிய சூழ்நிலையை தற்போதைய போர் ஏற்படுத்தக்கூடிய பேராபத்து இருக்கிறது. அதேவேளை, ட்ரம்ப் ஏற்கெனவே அச்சுறுத்திவருவதைப் போன்று வளங்களைச் சூறையாடுவதற்காக பல நாடுகளில் இராணுவத் தலையீடுகளைச் செய்வதை தடுக்க முடியாமலும் போகலாம். உலக நாடுகள் ட்ரம்பின் போர்வெறிக்கு எதிராக அணிதிரள வேண்டிய நேரம் வந்துவிட்டது. தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் மனித குலத்தை அழிவை நோக்கி நகர்த்திச் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அரசியல் கணக்கெடுப்பின் தேவை



யதீந்திரா


ஈழத் தமிழர் அரசியலை ஒரு வரியில் உச்சரிப்பதாயின் - தீர்வு பற்றிய அரசியல் கதைகளின் தொகுப்பு, என்று வரையறுக்கலாம். இலங்கை தமிழரசு கட்சியின் கதைகள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கதைகள், பல ஆயுத (விடுதலை) இயக்கங்களின் கதைகள், ஒரு தனி இயக்கத்தின் கதைகள், யுத்தத்திற்கு முன்னரான கதைகள், இப்போது யுத்தத்திற்கு பின்னரான கதைகள் - இவ்வாறு கதைகள் நீண்டு கொண்டே செல்கின்றன. இவ்வாறான கதைகள் அனைத்தினதும் உள்ளடக்கம் என்ன? ஒன்றே ஒன்றுதான் அதாவது, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது? வென்றால் வரப் போவதுதான் அந்த அரசியல் தீர்வு. இதுதானே இதுவரையான நமது அரசியல் கதைகளின் சாரம்சம்.

ஈழத் தமிழரின் அரசியல் வரலாற்றை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் காலத்திலிருந்து நோக்குவதாக இருந்தால், அன்றிருலிருந்து இடைவிடாமல் அரசியல் தீர்வு பற்றியே நாம் பேசிவந்திருக்கின்றோம். இப்போதும் பேசிக் கொண்டேயிருக்கின்றோம். இவ்வாறு தீர்வு பற்றிப் பேசுபவர்கள் எவருமே, தமிழர் அரசியல் தொடர்பில், ஒரு அரசியல் கணக்கெடுப்பை *(Political Audit)* செய்து பார்க்க முயற்சித்ததில்லை. அவ்வாறான ஒரு அரசியல் கணக்கெடுப்பை மேற்கொள்ளும் தற்துணிவும் எவருக்கும் இருப்பதாகவும் தெரியவில்லை. ஒரு வேளை அவ்வாறானதொரு கணக்கெடுப்பை மேற்கொண்டால் இன்று பேசப்படும் பல்வேறு விடயங்கள் பயனற்றவை என்னும் முடிவுக்கு வருவது மிகவும் இலகுவாக இருக்கும்.

இந்தக் கட்டுரை, அவ்வாறானதொரு அரசியல் கணக்கெடுப்பு பற்றிய உரையாடலுக்கான ஒரு பிள்ளையார் சுழியாகும். துணிவும் ஆற்றலும் உள்ள கட்சிகள், இயக்கங்கள் தங்களை தாங்களே நிறுத்துப் பார்க்க முயற்சிக்கலாம். அதாவது, தமிழ்த் தேசிய அரசியலில் இயங்கும் கட்சிகள் எவருக்கேனும் ஆற்றலிருந்தால் தங்களின் தோல்வி பற்றி ஒரு அரசியல் கணக்கெடுப்பை மேற்கொள்ளலாம். நாங்கள் எங்கு ஆரம்பித்தோம் - இப்போது எங்கு வந்து சேர்ந்திருக்கின்றோம்? இதற்கு என்ன காரணம்? இவ்வாறானதொரு நிலைமையை எங்களால் ஏன் உரண முடியாமல் போனது - அவ்வாறு உணர முடியாதளவிற்கு எவ்வாறான காரணிகள் எங்களை தடுத்தன? இந்த அடிப்படையில் இலங்கை தமிழரசு கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைக் இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், அதே போன்று, இப்போதும் தங்களை விடுதலைப் புலிகளின் விசுவாசிகளாக அடையாளப்படுத்திக் கொள்ள முற்படும் குழுக்கள், அமைப்புக்கள். பார்ப்போம் எவருக்கு ஆற்றலிருக்கின்றது என்று!

ஆரம்பித்த இடத்தையும் இப்போது நாம் வந்து சேர்ந்திருக்கும் இடத்தையும் புரிந்து கொள்ள முயற்சிப்போம். முக்கியமாக இளைய தலைமுறை சிந்திக்க வேண்டிய இடம் இது. 1957இல், அப்போதை பிரதான கட்சியான இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யு. பண்டாரநாயக்கவுடன் தீர்வு பற்றிப் பேசினார். அன்றைய பிரதான கட்சியான இலங்கை தமிழரசு கட்சிதான் இப்போதும் ஈழத் தமிழரின் பிரதான கட்சியாக இருக்கின்றது, இது ஒரு வகையில் அரசியல் ஆச்சரியம்தான் ஏனெனில் இலங்கையின் பிரதான பாரம்பரிய சிங்கள கட்சிகள் அனைத்தும் சிதைந்து போயிருக்கின்ற நிலையில், இலங்கை தமிழரசு கட்சி மட்டும் நின்றுபிடிக்கின்றது என்றால் அதனை எண்ணி ஆச்சரியப்படாமல் இருக்க முடியாதுதான்! இந்தப் பேச்சுவார்த்தையின் போதுதான், செல்வநாயகம் முதல் முதலாக சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு பற்றி பேசினார். ஆனால் அதனை பண்டாரநாயக்க ஆரம்பத்திலேயே மறுத்துவிட்டார்.

இதிலுள்ள ஒரு சுவாரசியம் ஆனால் வரலாற்று விடயம் உண்டு, பண்டாரநாயக்கதான் இலங்கையில் முதல் முலதலாக சமஸ்டி முறைமையின் அவசியம் பற்றிப் பேசியவர். அவர் அரசியல்வாதியாக வருவதற்கு முன்னர், இலங்கை மூன்று சமஸ்டிகளாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்னும் ஆலோசனையை முன்வைத்திருந்தார் - அதற்காக வாதிட்டார். செல்வநாயகம் அதனை நினைவுபடுத்திய போது, நான் இப்போது எனது எண்ணத்தை மாற்றிக் கொண்டேன் - மேலும் அதற்கான மக்கள் ஆணையையும் நான் பெறவில்லை என்று பண்டா பதிலளித்தார் - நீங்கள் உங்களுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வது பற்றி யோசிக்க முடியாதா என்றார். பண்டாரநாயக்க விரும்பியது போன்றே செல்வநாயகம் நடந்து கொண்டார். இதனடிப்படையில் பிறந்ததுதான் பண்டா-செல்வா உடன்பாடு. இதற்குள் நான் விரிவாகச் செல்லவில்லை ஆனால் இந்த விடயம் ஒரு அரசியல் யதார்த்தத்தை வெள்ளிடை மலைக்கியது. அதாவது, தென்னிலங்கையோடு பேசி சமஸ்டி அடிப்படையிலான ஒரு அரசியல் ஏற்பாட்டை ஒரு போதுமே பெற முடியாது - அதற்கு அவர்கள் இணங்க மாட்டார்கள். அதன் பின்னரான தென்னிலங்கையின் அரசியல் உரையாடல்கள் அனைத்துமே இந்த அடித்தளத்தின் தொடர்ச்சியாகவே இருந்திருக்கின்றது. இனியும் இருக்கும். அதாவது சமஸ்டியை போற்றிய ஒரு தென்னிலங்கை அரசியல் தலைவரே அது பொருத்தமற்றது என்று தள்ளிவிடுகின்றார் என்பதுதான் இங்கு குறித்துக் கொள்ள வேண்டிய விடயம்.





> எந்தப் பக்கம் போவதானாலும் கூட, அதற்கான சொந்தப் பலமும் இல்லை, இரவல் உதவிகளும் இல்லை. இந்த இடத்தில்தால் இருப்பது என்ன - அதனை கையாளுவதற்கான புத்திசாலித்தனம் தொடர்பிலான உரையாடல் தேவைப்படுகின்றது. ஆனால் அதற்கு முதலில் ஒரு அரசியல் கணக்கெடுப்பை மேற்கொள்ளும் தற்துணிவு அவசியம். இல்லாவிட்டால் மீண்டும் கதைகளிலேயே காலம் கழியும்.

தென்னிலங்கையோடு பேசி சமஸ்டியை பெற முடியாது என்பதை புரிந்து கொண்ட செல்வநாயகம், தென்னிலங்கையோடு மோதி, தனிநாட்டை பெற முடியுமென்று நம்பியிருப்பாரா என்னும் கேள்வியுண்டு - ஒரு வேளை அப்படி நம்பியிருந்தால் அது செல்வநாயகத்தின் தவறாகத்தானே புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் 1976 வட்டுக் கோட்டைத் தீர்மானமும் அதனைத் தொடர்ந்து, இடம்பெற்ற பொதுத் தேர்தல் வெற்றியையும் முன்வைத்து தனிநாட்டுக் கதைகளே தமிழர் அரசியலை ஆக்கிரமித்திருந்தது. இவ்வாறான கிளர்சியூட்டும் கதைகள் எப்போதுமே இளைஞர்களை உசிப்பிடக் கூடியது. அவ்வாறுதான் உசுப்பியும் விட்டது. ஆனால் தனிநாட்டை எவ்வாறு அடைவது என்னும் கேள்விக்கு அதனை முன்வைத்த எவரிடமும் பதிலில்லை. நாங்கள் ஒரு நிலைப்பாட்டை முன்வைக்கின்றோம், அவர்கள் எங்களை வெளியில் வீசிவிடுவார்கள் என்பதே செல்வாவின் பதிலாக இருந்தது. அவர்கள் என்றால் சிங்களவர்கள் ஆனால் செல்வநாயகம் எதிர்பார்த்தது போன்று நடந்ததா? உண்மையில் நடந்ததோ வேறு, சிங்கள அரசியல் சமூகம் தமிழர்களை வெளியில் விடவில்லை, உள்ளுக்குள் வைத்து, பலவீனப்படுத்திவிட்டு பிச்சை வேண்டாம் நாயை பிடியுங்கள் என்னும் நிலைமைக்கு கொண்டு வந்திருக்கின்றது. இன்று மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை வழங்கக் கூட, முடியாத கையறு நிலையிலேயே தமிழர் அரசியல் இருக்கின்றது. எவர் மறுத்தாலும், ஆவேசப்பட்டாலும், பரிகசித்தாலும் இதுதான் உண்மை நிலை.

செல்வநாயகத்தின் சிந்தனைப் பள்ளியின் ஊடாக எதனையும் அடைய முடியாது என்னுமடிப்படையில் உருவாகியதுதான் இளைஞர்களின் ஆயுதவாத (விடுதலைச்) சிந்தனைப் பள்ளி. இந்தப் பாடசாலையின் அடிப்படையான போதனை அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவப் போவதில்லை - சிங்களவர்களைத் தோற்கடித்து, நமக்கானதை நாமே அடைந்து கொள்வோம் என்பதுதான் இந்தப் பாடசாலையின் அரிவரிப் போதனை. இந்த இடத்தில்தான் ஈழத் தமிழர் அரசியல் இயக்கம், முதல் முறையாக வெளியாரின் தலையீட்டுக்கு ஆளாகின்றது. வெளியாரிடம் பயிற்சி, ஆயுதங்களை வாங்கிவிட்டு, வெளியார் எங்களை பயன்படுத்த முற்பட்டார்கள் என்று கூறவதைப் போல் அரசியல் முட்டாள்தனம் வேறில்லை. தங்களுக்கு இலாபம் இல்லாமல் வெளியார் எதற்காக எங்களுக்கு உதவ வேண்டும்? இந்தியாவின் தலையீட்டின் விளைவாக, சாதாரணமாக இருந்த தமிழ் இயக்கங்கள் அனைத்தும், திடீரென்று அவர்களின் ஆற்றலுக்கு மீறிய தோற்றத்தைப் பெற்றன. சாதாரண இளைஞர்கள் தலைவர்களானார்கள், பின்னர் கதாநாயர்களாக மாறினர். இது பற்றிப் பேச ஒன்றுமில்லை ஏனெனில் இந்த விடயம் நமது சூழலில் அதிகம் பேசப்பட்ட ஒன்று. இந்தக் காலத்தில் விடுதலை என்று புறப்பட்ட ஆயுத அமைப்புக்கள் தங்களுக்குள் குத்துச் சண்டையில் ஈடுபட்டதும், அதில் விடுதலைப் புலிகளின் அமைப்பு வெற்றிபெற்றதும், ஏனையவர்கள் அழிந்தும், மிஞ்சியவர்கள் அரசாங்கத்தோடு இணைந்தும் சென்ற கதை பற்றியும் இனிப் பேசிப் பயனில்லை.

ஆனால் இந்த இயக்கங்களும், பின்னர் தனிப்பெரும் இயக்கமாக தங்களை முன்னிறுத்துவதில் வெற்றிபெற்ற விடுதலைப் புலிகள் அமைப்பும் எதனைச் சாதகமாக சாதித்தது? பதில் ஒன்றுமில்லை. தியாகங்களின் கதைகள், அர்பணிப்புக்களின் கதைகள் குறும்படங்களுக்கும், நாவல்கள், பாடல்கள் எழுதி மகிழ்வோருக்கும் வேண்டுமானால் புளகாங்கிதத்தை கொடுக்கலாம் - அதுதான் தற்போது நடந்தும் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்தத் தியாகங்கள் அர்ப்பணிப்புக்கள் அனைத்துமே விழலுக்கிறைத்த நீரானதே வரலாறு. சிங்களவர்களை தோற்கடித்து, எங்களுக்கானதை நாங்களே எடுத்துக் கொள்ளப் போவதான அரசியல் ஆவேசம், இறுதியில் சிங்கள அரசியல் சமூகத்தை மேலும் பலப்படுத்தி, தமிழரோடு பேச வேண்டிய அவசியமேயில்லை, என்னும் அதிகார உச்சத்திற்கு கொண்டு சென்றிருக்கின்றது. சட்டவாத, ஆங்கிலப் புலமைநிலை, தமிழ் தேசியவாதிகளின் அரசியலும் தோல்விடைந்திருகின்றது - அவர்களால் முடியாது என்று புறப்பட்ட ஆயுதவழிப் புரட்சியாளர்களின் அரசியலும் தோல்வியடைந்திருக்கின்றது. இப்போது தோற்றுப் போன இரண்டு தரப்புக்களும் எங்கு செல்வது என்று தெரியாத நிலையில், ஒரு முட்டுச் சந்தியில் நிற்கின்றனர். இந்தப் பக்கம் போகலாமா அல்லது எந்தப் பக்கம் போகலாம் என்பதை தீர்மானிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் எந்தப் பக்கம் போவதானாலும் கூட, அதற்கான சொந்தப் பலமும் இல்லை, இரவல் உதவிகளும் இல்லை. இந்த இடத்தில்தால் இருப்பது என்ன - அதனை கையாளுவதற்கான புத்திசாலித்தனம் தொடர்பிலான உரையாடல் தேவைப்படுகின்றது. ஆனால் அதற்கு முதலில் ஒரு அரசியல் கணக்கெடுப்பை மேற்கொள்ளும் தற்துணிவு அவசியம். இல்லாவிட்டால் மீண்டும் கதைகளிலேயே காலம் கழியும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காட்டான்

# அணிசேரா நாடுகளுக்கு தலைமையேற்ற நாடு மத்தியகிழக்குப் போரில் எந்தப் பக்கம் நிற்கிறது?

**ஒருவாரமாக சுரேஸ் சாலேயுக்காககுரல் கொடுத்த பருவகால பட்சிகள் இப்போது மத்தியகிழக்குப் போரின் பக்கம் பறந்துவிட்டன. ஈரானின் போர்க்கப்பலை இலங்கைக் கடல் எல்லையில் அமெரிக்கா தாக்கியதை அநுர அரசு எவ்வாறு பார்க்கிறது?**



அரசியல்வாதிகளை பருவகால பட்சி கள் என்று பொதுவாகக் கூறுவார்கள்.அவ்வப்போது எது எது கண்ணில் முக்கி யமாகப்படுகிறதோ அதனை முன்னிலைப் படுத்தி செயற்ப-டுவதை இதுகுறிக்கும்.

இதில் இலங்கை அரசியல்வாதிகள் இன மத பேதமின்றி ஒருமுகப்பட்டவர்கள். அவ்வப்போது திடீரென வாகனங்கள் சுழன்று திரும்புவது போல இவர்களுடைய செயல்பாடுகள் அமைந்திருக்கும். கடந்தவாரம் இடம்பெற்ற முக்கிய விடயத்தை மறந்து இந்தவாரத்தில் இன்னொரு விடயத்துக்குள் தம்மைப் புகுத்தி விடுவார்கள்.

இதற்கு நல்லதொரு உதாரணமாக, கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தேசிய புலனாய்வு முன்னாள் பணிப்பாளர் சுரேஸ் சாலேயின் விடயத்தைப் பார்க்கலாம். இவர் கைதானதை தூக்கிப் பிடித்து குய்யோ முறையோ என்று கத்தியவர்களின் குரலை இப்போது காணவில்லை.

விமல் வீரவன்ச, உதயகம்மன்பில, சரத் வீரசேகர ஆகிய சிங்கள தேசிய நாயகர்கள், சுரேஸ் சாலே கைதான விடயத்தில் என்னென்ன சொன்னார்கள்? இந்த விடயத்தை முன்வைத்து நாட்டை முடக்கப் போவது போன்றுபேசித் தள்ளினார்கள். குற்றத்தடுப்பு திணைக்களத்தை முற்றுகையிடுவார்கள் போன்று இவர்களது வீரவசனங்கள் அமைந்திருந்தன.

கடந்த மாதம் 25ம் திகதி தனியார் பணியகம் ஒன்றில் வேலைக்குச் சென்று கொண்டிருக்கையில் பேலியகொட என்ற இடத்தில் வைத்து சுரேஸ் சாலே கைது செய்யப்பட்டார்.தொடர்ந்து 90 நாட்கள் குற்றத்தடுப்பு திணைக்களத்தில் தடுத்துவைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதித்தது.

இதன் அடுத்தகட்டமாக, 2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணையில் இவர் மூன்றாவது சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளாரென்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது, சுரேஸ் சாலேயை மிகவும் நெருக்கமாக கண்காணிக்க அனுமதிக்குமாறு நீதிமன்றத்திடம் இந்த மனு ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், சுரேஸ் சாலேக்காக முன்னர் குரல் கொடுத்தவர்கள் காணாமல் போய்விட்டார்கள். ரணில் விக்கிரமசிங்க கைதான போது குற்றத்தடுப்பு திணைக்களத்தை முற்றுகையிட்டது போன்று சுரேஸ் சாலே விடயத்திலும் இடம்பெறலாமென எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமேகிடைத்தது.

இவரது கைது தொடர்பாக இரண்டு மனுக்கள் தாக்கலாகியுள்ளன. ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரியொருவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுரேஸ் சாலேயின் தடுப்புக்காவல் தொடர்பாக அவரது மனைவி மற்றொரு மனுவை சமர்ப்பித்துள்ளார்.திணைக்கள தடுப்புக்காவலில் அவரை பார்வையிடவும், வீட்டிலிருந்து உணவு கொண்டு சென்று வழங்கவும், வழக்கறிஞர்கள் அவரைச் சந்தித்து கலந்துரையாடவும் தற்போதுள்ள தடைகளை நீக்கவேண்டுமென இந்தமனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் கையளிக்கப்படும் முன்னர் சுரேஸ் சாலேக்காக முன்னின்ற ஒருவரையும் காணவில்லை. பிள்ளையான் கைது செய்யப்பட்ட போது அவரை தடுப்புகாவலில் சந்திப்பதற்கு தம்மை ஒரு வழக்கறிஞராக அடையாளப்படுத்திய உதயகம்மன்பில எங்கே என்று தெரியவில்லை. இன்னும் சில நாட்களுக்கு சுரேஸ் சாலே தடுத்து வைக்கப்படுவாரானால் ரணிலும் மற்றைய அரசியல்வாதிகளும் செய்ததுபோல இவரும் திடீர் நோயாளியாகி சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்படக்கூடும்.அது தானே வழமையான நடைமுறை.

இவரது கைதை இனவாத செயலாக ஊதிப்பெருப்பித்து, அதன் மூலம் குளிர் காய்ந்து அரசியல் லாபம் பெறலாமென முயன்றவர்கள் அது பயனளிக்கப் போவதில்லையென்று தெரிந்தவுடன் இப்போது தமது செயல்பாடுகளை புதிய திசைக்கு திருப்பியுள்ளனர். இது மத்தியகிழக்கு போர்.

இதுவே இப்போது பெரிதாக பேசுபொருளாக இவர்களுக்குக் கிடைத்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இஸ்ரேலையும் இணைத்துக் கொண்டு ஈரான் மீது தாக்குதலை ஆரம்பித்து ஒரு வாரமாகிறது. மூன்றாவது உலகயுத்தத்தின் ஆரம்பமாக இது இருக்குமென பலரும் விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர். ஈரானின் அதியுயர் தலைவர் கொமனி கொல்லப்பட்டுள்ளார். அடுத்தடுத்த தலைவர்கள் போரைக் கொண்டு நடத்துகிறார்கள். மத்தியகிழக்கு பிராந்திய நாடுகள் அனைத்தும் யுத்தமேகத்தால் சூழப்பட்டுள்ளன. கொல்லப்பட்டோர் தொகை, போரின் உண்மையான நிலை ஆகியவற்றை சரியான தகவல்களை முழுமையாக அறியமுடியாத நிலையில் போர் தொடங்கியுள்ளது.

ஒரு குறிப்பிட்ட இலக்குடன் போர் இடம்பெறுவதாகச் சொன்னாலும் இதன் பாதிப்பு உலகு முழுவதுக்குமானது. எண்ணெய் விலை, தங்கத்தின் விலை மட்டுமன்றி நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துமே ஏறிக்கொண்டு போகிறது. போர் [illegible] தொடருமானால் சில நாடுகளில் பட்டினிப் போர் காணப்படும்.போரில் வெல்பவர்கள் யார் என்பதை விட இதன் பாதிப்பு முழு உலகுக்குமானது என்பதே யதார்த்தம். இதனையிட்டு எவரும் கவலைப்படுவதாக இல்லை.

2003ல் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புக்ஷ் ஈராக் மீது ஆரம்பித்த யுத்தத்தை ட்ரம்பின் ஈரான் மீதான யுத்தம் நினைவூட்டுகிறது. அன்று அமெரிக்கா ஈராக்கில் இரசாயன குண்டு இருப்பதாகக் கூறிக்கொண்டு யுத்தத்தை நடத்தியது. ஆனால் இதுவரை அது கண்டுபிடிக்கப்படவில்லை. உண்மையில் அந்தப் போரின் இலக்கு ஈராக் அதிபர் சதாம் ஹூசேனாக இருந்தது. இது பற்றி தமிழ்நாட்டு சஞ்சிகை ஒன்று கீறிய கேலிச்சித்திரத்தில் - அமெரிக்கா கண்டுபிடித்த ஈராக்கின் இரசாயனக் குண்டு சதாம் ஹூசேன் என்று கீறியிருந்தது.

ஈரான் அதிபர் கொல்லப்பட்ட பின்னரும் அமெரிக்கா முன்னெடுத்திருக்கும் போர் தொடருகிறது. உக்ரைன் மீது ரஷ்யா நடத்திக் கொண்டிருக்கும் போரின் அவலக் காட்சிகளை இங்கு ஒவ்வொரு நிமிடமும் காணக்கூடியதாக விருக்கிறது. மத்தியகிழக்கில் குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கையில் இலங்கையின் தென்பகுதியில் சுமார் 22 மைல் கடல் எல்லைக்கப்பால் சர்வதேச கடற்பரப்பில் ஈரானுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல் ஒன்று தாக்குதலுக்குள்ளானது. அக்கப்பலில் இருந்த 160 கடற்படையைச் சார்ந்தவர்கள் அரைவாசிக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐ.ஆர்.ஐ. எஸ்.டேனா என்ற ஈரானியபோர்க்கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றுதாக்கி அழித்ததாக அறிவிக்கப்பட்டது. இதில் காயங்களுடன் மீட்கப்பட்ட ஈரானியப் படையினர் இலங்கை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஈரானிய போர்க்கப்பல் எவ்வாறு இலங்கையை அண்மித்த கடலில் வந்தது. அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் எவ்வாறுஅடையாளம் கண்டது. ஈரானிய கப்பலை கடல் எல்லைக்குள் அனுமதிக்க இந்தியா மறுத்ததா. இவ்வாறு பலகேள்விகள் இலங்கை அரசியலில் எழுந்துள்ளன.

இலங்கையின் பாதுகாப்பு வலயத்தில் ஈரானிய கப்பல் மீது எவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது என்றுபொது ஜன பெரமுன எம்.பி. நாமல் ராஜபக்ச கேள்வி கேட்டுள்ளார். அதேவேளை, ஈரானிய போர்வீரர்களை இந்தியா கேவலமாக நடத்தியுள்ளதென பெரமுனவின் இன்னொரு எம்.பி.யான சாமரசம்பத் இந்தியாவை சாடியுள்ளார்.

தாக்கி அழிக்கப்பட்ட கப்பல் யாருடையது, யார் அழித்தார்கள் என்பது எமக்குத் தெரியாது. தாக்குதலுக்கு உள்ளான தகவல் கிடைத்ததும் மனிதாபிமான அடிப்படையில் தங்கள் அரசு செயல்பட்டது என வெளிவிவகார அமைச்சர் விஜிதஹேரத் கூறியுள்ளார். இலங்கைக்குள் வந்த ஈரானிய கப்பலில் வந்தவர்களுக்கு கொழும்பில் அடைக்கலம் கொடுத்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமர பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

1970களில் அணிசேரா நாடுகளுக்கு தலைமை தாங்கிய இலங்கையின் கொள்கையிலேயே இலங்கை இருப்பது போன்ற காட்சி ஆளும் தரப்பினரின் கூற்றுகள் ஊடாக தெரியவருகிறது. உண்மையிலேயே இது அணிசேரா கொள்கையா அல்லது நடுநிலைமையா என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால்,ஈரானுக்கு ஆதரவான கருத்துகள் இலங்கை அரசியல் கட்சிகளிடையே பரவப்பட்டு வருகிறது. கொல்லப்பட்ட ஈரானின் அதிபருக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஆனால், தமிழர் தேசிய அரசியலும் அவர்களின் தலைவர்களின் போக்கும் என்னவென்று தெரியவில்லை. மத்திய கிழக்கில் போர் ஆரம்பமாகிவிட்டது என்பதே தெரியாதது போல பாசாங்கு பண்ணிக் கொண்டிருப்பது ஏன்.எங்கு போர் நடந்தாலும் முதலில் பலியாவது அப்பாவிப் பொதுமக்களே என்பது கூடவா தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அமெரிக்கா மூழ்கடித்த ஈரான் போர்க் கப்பலை காக்கும் பொறுப்பு இந்தியாவுக்கும் உண்டா?

ஜுகல் புரோகித்

மார்ச் 4, புதன்கிழமை அன்று அமெரிக்கா ஒரு வீடியோவை வெளியிட்டு, தனது நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று இந்தியப் பெருங்கடலில் ஈரான் நாட்டின் போர்க்கப்பல் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி அதை மூழ்கடித்ததாகத் தெரிவித்தது.

இலங்கையின் அதிகாரபூர்வ தகவலின்படி இந்தத் தாக்குதல் புதன்கிழமை அதிகாலை சுமார் 5 மணியளவில் தெற்கு இலங்கை நகரமான காலி அருகே நடந்தது.

இதுவரை 32 மாலுமிகள் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், 84 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், மற்றவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சியின் கூற்றுப்படி, இந்த கப்பலின் பெயர் 'டெனா". இதில் சுமார் 130 மாலுமிகள் இருந்தனர். இந்தக் கப்பல் இந்தியக் கடற்படையின் அழைப்பின் பேரில் வந்திருந்தது என்றும், எந்த எச்சரிக்கையும் இன்றி இது மூழ்கடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் செய்தி வெளியான பிறகு, சில கேள்விகள் எழுந்துள்ளன.

ஈரான் நாட்டிலிருந்து இவ்வளவு தொலைவில் இந்தத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது? இந்தத் தாக்குதல் சட்டப்படி சரியானதா?

இதன் பொருள் இந்தப் போர் இப்போது இந்தியாவிற்கு இன்னும் நெருக்கமாக வருகிறதா? இது தொடர்பாக இந்தியா என்ன செய்ய முடியும்? ஈரானியப் போர்க் கப்பலின் பாதுகாப்புக்கு இந்தியாவுக்கு எந்த வகையிலும் பொறுப்பு இருந்ததா?

ஈரானியப் போர்க்கப்பலை மூழ்கடிக்க 'மார்க் 48' நீர்மூழ்கி ஏவுகணைகளை பயன்படுத்தியதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இது எதிரியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் அல்லது போர்க் கப்பல்களைத் தாக்கப் பயன்படுத்தப்படுகிறது. இவற்றை நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்க்கப்பல்கள் அல்லது விமானங்களிலிருந்தும் ஏவ முடியும்.


அமெரிக்கக் கடற்படையின் கூற்றுப்படி, அவர்களின் அனைத்து நீர்மூழ்கிக் கப்பல்களிலும் இந்த மார்க் 48 நீர்மூழ்கி ஏவுகணைகள் உள்ளன. அமெரிக்கக் கடற்படை கடந்த மூன்று தசாப்தங்களாக இந்த வகை நீர்மூழ்கி ஏவுகணைகளை பயன்படுத்தி வருகிறது. இதன் புதிய பதிப்பின் எடை சுமார் 1700 கிலோ கிராம் ஆகும்.

ஈரான் நாட்டிலிருந்து இவ்வளவு தொலைவில் இந்தத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது?

இந்தக் கேள்விக்கு மார்ச் 2 அன்று நடந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அமெரிக்க விமானப்படை ஜெனரல் டான் கேன் பதிலளித்திருந்தார், "முழு பிராந்தியத்திலும் உலகம் முழுவதிலும் எங்களது நடவடிக்கைகள் தொடரும்."

இந்த வார்த்தைகள் அமெரிக்காவின் நோக்கத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்தப் போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட இடம் தெற்கு இலங்கையின் காலி துறைமுகத்திலிருந்து சுமார் 19 கடல் மைல்கள் (சுமார் 35 கிலோமீட்டர்) தொலைவில்





இருந்ததாக இலங்கை அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

கடல்சார் மற்றும் சர்வதேச வர்த்தக சட்ட நிபுணரான மூத்த வழக்கறிஞர் ராகுல் நரிச்சாணியா, "எந்தவொரு நாட்டின் கடற்கரையிலிருந்தும் 12 கடல் மைல்கள் வரையிலான பகுதி 'பிராந்திய கடல் பகுதி" என்று அழைக்கப்படுகிறது. இதன் பொருள் அங்கு நடக்கும் எந்தவொரு சம்பவமும் நிலத்தில் நடந்தது போலவே கருதப்படும், மேலும் சட்ட விதிகளும் அவ்வாறே பொருந்தும்.

இதற்கு அப்பால், 200 கடல் மைல்கள் வரையிலான பகுதி 'சிறப்புப் பொருளாதார மண்டலம்' ஆகும். இங்கே நாட்டுக்கு எண்ணெய்-எரிவாயு, மீன்பிடித்தல் போன்றவற்றில் சில வணிக உரிமைகள் கிடைக்கும். ஆனால் இந்தப் பகுதி பிராந்திய கடல் பகுதி போன்றது அல்ல," என்றார்.

"இப்போது, இந்தச் சம்பவம் இலங்கையின் பகுதியில் நடந்திருந்தால், அந்தப் பிரச்னையை சர்வதேச அளவில் எழுப்ப இலங்கைக்கு முழு உரிமை உண்டு. உதாரணமாக, இந்தக் கப்பல் மூழ்கியதால் எண்ணெய் கசிவு ஏற்படும் அபாயம் இருந்தாலோ, அல்லது மற்ற கப்பல்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டாலோ, அல்லது இலங்கையின் வணிக நலன்கள் பாதிக்கப்பட்டாலோ, இலங்கை இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம்."

இந்தியக் கடற்படையின் முன்னாள் அதிகாரி ரியர் அட்மிரல் சுதீர் பிள்ளை, "அமெரிக்காவும் இஸ்ரேலும் இந்த மோதலைத் தொடங்கியது சட்டபூர்வமானதா அல்லது அரசியல் ரீதியாகச் சரியானதா என்பது தனித்த மற்றும் விவாதத்திற்குரிய கேள்வி. ஆனால் போர் தொடங்கிய பிறகு, திறந்த கடலில் அமெரிக்காவின் எதிரி போர் கப்பல் (ஈரான்) இருந்தால் அது ஒரு சட்டபூர்வமான ராணுவ இலக்காக கருதப்படும்" என்றார்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகத்தின் வரைபடத்தின்படியும், மார்ச் 4 அன்று ஜெனரல் டான் கேன் அளித்த தகவலின்படியும், 'யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன்' கப்பல் அரபிக் கடலில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது உலகின் மிகப்பெரிய விமானம் தாங்கிப் போர்க் கப்பல்களில் ஒன்றாகும்.

பிப்ரவரி தொடக்கத்திலிருந்தே ஈரான் சுற்றியுள்ள பகுதிகளில் தனது ராணுவ பலத்தைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் போர்க்கப்பல்கள் இந்தியாவின் மேற்கு கடற்கரையை ஒட்டிய அரபிக் கடலிலும் காணப்பட்டன.

அமெரிக்கக் கடற்படை தனது துறைமுகங்களைப் பயன்படுத்த அனுமதி அளிக்கவில்லை என்று இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது.

பிப்ரவரி 28 அன்று இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தவிர வளைகுடா நாடுகளையும் ஈரான் குறிவைத்ததிலிருந்து இந்தத் தாக்குதல்களின் தொடர்ச்சி காணப்படுவதாக எங்களுடன் பேசிய நிபுணர்கள் கூறுகின்றனர். இலங்கை அருகே நடந்ததையும் அந்தச் சூழலிலேயே பார்க்க வேண்டும் என்கிறார்கள் அவர்கள்.

இந்தத் தாக்குதல் குறித்து ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்ஜி எச்சரிக்கை விடுத்துள்ளார் என்பதையும், அமெரிக்கா தான் எடுத்த இந்த நடவடிக்கைக்காகப் வருத்தப்படும் என்று அவர் கூறியுள்ளதையும் புரிந்துகொள்வது அவசியமாகும்.

ஈரானியப் போர்க்கப்பல் மீதான தாக்குதலுக்குப் பிறகு இலங்கையுடன் இணைந்து தானும் பல உதவி நடவடிக்கைகளை மேற்கொண்டதாக இந்தியக் கடற்படை மார்ச் 5 அன்று ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அட்மிரல் சுதீர் பிள்ளை கருத்தின்படி, இந்தச் சூழலில் இந்தியா அந்தக் கப்பலைத் தாக்குதலிலிருந்து காக்கச் சட்டப்பூர்வமாக எதையும் செய்திருக்க முடியாது. ஏனெனில் அப்படிச் செய்திருந்தால் இந்தியாவே இந்த மோதலில் ஒரு தரப்பாகக் கருதப்பட்டிருக்கும்.

"அந்தக் கப்பல் இந்தியப் பிராந்திய கடல் எல்லைக்குள் அல்லது இந்தியத் துறைமுகத்தில் இருந்திருந்தால், இந்தியாவின் நடுநிலைத்தன்மை காரணமாக அதற்குப் பாதுகாப்பு கிடைத்திருக்கும், மேலும் எந்தவொரு தரப்பும் அங்கு தாக்குதல் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்காது.

ஆனால் கப்பல் இந்திய எல்லைக்குள்ளும் இல்லை, இந்திய துறைமுகத்திலும் இல்லை எனும்போது, கடற்படை போர் விதிகளின்படி போரில் ஈடுபட்டுள்ள நாடுகள் அதை ஒரு ராணுவ இலக்காகக் கருதலாம். இந்தியா அந்தக் கப்பலுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தனது போர்க் கப்பல்களை அனுப்பியிருந்தால், அது மோதலில் இந்தியா ஒரு பக்கம் சேருவதாகப் பார்க்கப்பட்டிருக்கும்."

நாங்கள் பேசிய நிபுணர்களின் கூற்றுப்படி, இந்தியாவில் நடந்த கடற்படை பயிற்சிக்குப் பிறகு, அந்தப் போர்க்கப்பலின் பாதுகாப்பு என்பது அந்த நாடு மற்றும் அந்தக் கப்பலின் சொந்தப் பொறுப்பாகும். (பிபிசி)

# இலங்கையில் மற்றொரு ஈரான் போர்க்கப்பல்!

இலங்கை தனது கடற்கரைப் பகுதியில் ஈரானிய கடற்படைக் கப்பல் ஒன்றைக் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாக தெரிவித்துள்ளது. ஈரானிய போர்க்கப்பல் ஒன்று அதே கடல் பகுதியில் அமெரிக்காவால் மூழ்கடிக்கப்பட்டு, குறைந்தது 87 பேர் உயிரிழந்ததற்கு ஒரு நாள் கழித்து, இலங்கை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஐஆர்ஐஎஸ் புஷெர் என்ற அந்த ஈரானிய கப்பல், அதன் இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்ததால் இலங்கையின் துறைமுகங்களில் ஒன்றில் நிறுத்த புதன்கிழமை (மார்ச் 4) அனுமதி கோரியிருந்தது.

பல மணி நேர விவாதத்திற்குப் பிறகு வடகிழக்கு துறைமுகம் ஒன்றில் கப்பலை நிறுத்துவதற்கு இலங்கை அனுமதி அளித்தது, "மனிதநேயத்தைப் பாதுகாக்க நாங்கள் ஒருபோதும் தயங்க மாட்டோம்" என்று ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

அந்தக் கப்பலில் இருந்த சுமார் 204 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு கொழும்பு துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்க-இஸ்ரேலிய தாக்குதல் நீடிக்கும் நிலையில், எந்தப் பக்கமும் சாயப்போவதில்லை என்று கூறி தங்களது நடுநிலைமையை இலங்கை வலியுறுத்தியுள்ளது.

"எங்களது நிலைப்பாடு என்பது எங்களது மனிதாபிமான விழுமியங்களை வெளிப்படுத்தும் அதேவேளையில் எங்களது நடுநிலைமையைப் பாதுகாப்பதாகும்" என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


"சர்வதேச உடன்படிக்கைகளுக்கான எங்களது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையிலும், எங்களது நாட்டின் நற்பெயர் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாக்கும் வகையிலும், மனித உயிர்களைப் பாதுகாக்கும் வகையிலும் இதில் இலங்கை தலையிட்டது" என்று அவர் வியாழக்கிழமை கூறினார்.

வியாழக்கிழமை, ஈரானின் ஐஆர்ஐஎஸ் புஷெர் போர்க்கப்பல் இயந்திரக் கோளாறு இருப்பதாகக் கூறி துறைமுகத்திற்குள் வர இலங்கையிடம் அனுமதி கோரியது.

அந்தக் கப்பல் நாட்டின் முக்கிய வணிகத் துறைமுகமான கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் இருந்தபோதிலும், இறுதியில் திருகோணமலை துறைமுகத்தில் நிறுத்தப்பட திஸாநாயக்க அனுமதி அளித்தார். அந்தக் கப்பல் கொழும்பில் நிறுத்தப்பட்டிருந்தால், நாட்டின் கடல்சார் தொழில் 'பாதிப்புக்குள்ளாகும்" அபாயம் இருந்ததாகவும் அவர் கூறினார்.

ஈரானிய போர்க்கப்பலான ஐஆர்ஐஎஸ் புஷெரில் இருந்த 204 பேர் கொழும்பு துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கமாண்டர் புத்திக சம்பத், "அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட பின்னர், அவர்களை வெலிசறையில் உள்ள கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லும் பணி தொடங்கியுள்ளதாகத்" தெரிவித்தார்.



வியாழக்கிழமை நிலவரப்படி, இலங்கை கடற்படை காணாமல் போன ஐஆர்ஐஎஸ் தேனா கப்பலின் பணியாளர்களைத் தனது கடல் பகுதியில் தொடர்ந்து தேடி வருகிறது.

ஐஆர்ஐஎஸ் தேனாவிலிருந்து உயிர் தப்பிய 32 பேர் தற்போது இலங்கையின் காலி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கை சுதந்திரத்திற்குப் பிறகு நீண்டகாலமாக அணிசேராக் கொள்கையைப் பேணி வருகிறது.

ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுடனும் இலங்கை வலுவான பொருளாதார மற்றும் ராஜிய உறவுகளைக் கொண்டுள்ளது.

இலங்கை ஈரானிடமிருந்து 250 மில்லியன் டாலர் மதிப்பிலான கச்சா எண்ணெயை வாங்கியிருந்ததுடன், அதற்கான தொகையை மாதந்தோறும் தேயிலை ஏற்றுமதி மூலம் திருப்பிச் செலுத்தி வருகிறது. மறுபுறம், அமெரிக்கா இலங்கையின் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கான முதன்மை ஏற்றுமதிச் சந்தையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓநாய்களும் ஆட்டுக்குட்டிகளும் ஈழத் தமிழர்களும்!



நிலாந்தன்

ஒரு சிறுவர் கதையிலிருந்து தொடங்குவோம். ஓநாய் ஒன்று நீரோடையில் நீர் அருந்த வந்தது. அங்கே ஒர் ஆட்டுக்குட்டி நீர் அருந்திகொண்டிருந்தது. ஓநாய் ஆட் டுக்குட்டியைப் பார்த்துச் சொன்னது "டேய் நீதான் போன மாதம் என்னை கேவலமான வார்த்தைகளால் திட்டியது. அதற்குத் தண்டனையாக உன்னை இப்பொழுது நான் கொன்று சாப்பிடப் போகிறேன்" என்று.அதற்கு ஆட்டுக் குட்டி சொன்னது "ஐயா நான் போன மாதம் பிறந்திருக்கவே இல்லை" என்று. ஓநாய் சொன்னது" அப்படியென்றால் அது உன்னுடைய அம்மாவாக இருக்கும். உன்னுடைய அம்மாவைத் தண்டிப்பதற் காக இப்பொழுது உன்னைச் சாப்பிடப் போகிறேன்." என்று கூறி ஆட்டுக்குட்டி யின் மீதுபாய்ந்து அதைக் கொன்றுதின் றது.


இந்தக் கதைக்குள் இருக்கும் செய்தி என்னவென்றால்,கொல்வது என்று தீர்மானித்தால் அதற்கு ஒரு காரணம் தேவை. அதுதான் இப்பொழுது ஈரானில் நடக்கிறது. முன்பு ஈராக்கில் நடந்தது. லிபியாவில் நடந்தது. ஈரானை அடிக்க வேண்டும், அதன் எதிர்ப்பை நசுக்க வேண்டும். ஈரான் கீழ்ப்படிந்தால் மேற்காசியா சுருண்டுவிடும்.எனவே ஈரானை நசுக்கவேண்டும்.

ஈரான் அணுகுண்டு தயாரித்துக் கொண்டிருக்கிறது. எனவே அதைத் தடுக்க வேண்டும் என்பது பிரதான குற்றச்சாட்டு.ஈரான் ஏன் அணுகுண்டை வைத்திருக்கக் கூடாது? அது பாரசீக நாகரிகத்தின் வழித்தோன்றல்.பாரசீகநாகரிகமானது இப்போதிருக்கும் பெரும்பாலான ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைவிடவும் மூத்தது. ஒரு மூத்த நாகரீகம் அணுகுண்டை ஏன் வைத்திருக்கக் கூடாது?

இது தொடர்பாக ஓமானின் அனுசரணையோடு நடந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பில் பீட்டர் கிர்னஸ் என்பவர் எக்ஸ் தளத்தில் எழுதியுள்ளார். ஓமான் நாட்டின் வெளிவிவிகார அமைச்சின் ராஜதந்திர உதவியாளரான அவர் கூறுவதின்படி, ஈரான் அமெரிக்காவோடு உடன்பாட்டுக்குச் சம்மதித்த பின்னர் தான் அமெரிக்கா ஈரானைத் தாக்கியிருக்கிறது. அதாவது ஈரான் அணுகுண்டு உற்பத்தியைக் கைவிடும் விடயத்தில் அமெரிக்காவோடு ஏதோ ஒரு சமரசத்துக்கு வரத் தயாராக இருந்தது. பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டிருந்த ஒரு பின்னணியில் தான் ஈரான் தாக்கப்பட்டிருக்கிறது. ஆயின், இங்கே பேச்சுவார்த்தைகள் எனப்படுகின்றவை ஈரான் உஷார் நிலையில் இருப்பதைத் தடுக்கும் தந்திரநோக்கத்தைக் கொண்டவையா?

ஈரானின் அதிபர் இரும்பு கரம் கொண்டு நாட்டை ஆண்டார் என்று மேற்குநாடுகள் கூறுகின்றன.பெண்களுக்கு உரிமை இல்லை. அரச எதிர்ப்பாளர்கள் ஈவிரக்கமின்றி வேட்டையாடப்படுகிறார்கள், உலகில் அதிகம் மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்ட நாடு போன்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. அவற்றில் உண்மையுண்டு. ஆனால் அது ஈரானியர் களின் பிரச்சினை. அதற்காக ஈரானிய அதிபரை தண்டிப்பதற்கு வெளிநாடுகளுக்கு உரிமையும் இல்லை.

அதேசமயம் போரின் தொடக்க நாளில் சில நிமிடங்களிலேயே கொமெய்னியும் அவருடைய குடும்பமும் அழிக்கப்படும் அளவுக்கு ஈரான் பலவீனமாக இருந்திருக்கிறது. அதன் எல்லாப் பாதுகாப்பு ஏற்பா



டுகளையும் தகர்த்தெறியும் அளவுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் வலிமையாக இருந்திருக்கின்றன. ஈரானின் வலிமையை உடைப்பதில் அதன் உள் எதிரிகளுக்கும் பங்கு இருந்திருக்கிறது. உள்ளே இருப்பவர்கள் வழங்கிய தகவல்களை வைத்துத்தான் கொமெய்னியின் தலை குறிவைக்கப்பட்டிருக்கிறது. தன்னைத் தானே மூடும் சமூகங்கள் தம்மைத் தாமே காட்டிக் கொடுப்பவர்களை உற்பத்தி செய்கின்றன.

எதுவாயினும் கடந்த மூன்று மாத காலப் பகுதிக்குள் அமெரிக்கா தன்னை உலகின் ஏகப் பெருவல்லரசு என்று நிரூபிக்கும் இரண்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடித்திருக்கிறது.முதலாவதுவெனிசுலாவின் அதிபரை அவருடைய நாட்டுக்குள் இறங்கித் தூக்கியது. இரண்டாவது, ஈரானின் அதிபரும் உட்பட தீர்மானிக்கும் அதிகாரமுடைய உயர் மட்டத் தலைவர்களை போர் தொடங்கிய அன்றே தீர்த்துக் கட்டியது.

இறமையுள்ள நாடு ஒன்றின் தலைவரை அந்த நாட்டுக்குள் இறங்கிக் கைது செய்கிறார்கள். மற்றொரு நாட்டின் தலைவரை குண்டுபோட்டுக் கொலை செய்கிறார்கள். வெளிநாடுகளின் வான் பரப்புக்குள் ஆளில்லா விமானங்களை அத்துமீறி அனுப்பி ஆட்களைக் கொல்லுகிறார்கள். இலக்குகளை அழிக்கிறார்கள். இப்பொழுது சொல்லுங்கள், இறையாண்மை எங்கே இருக்கிறது? சுதந்திரம் எங்கே இருக்கிறது? நாடுகளின் ஆள்புல எல்லைகளுக்குப் பொருள் என்ன?

10 கோடி மக்களை கொண்ட ஈரானுக்கும் இது பொருந்தும். சிறிய இலங்கைத் தீவுக்கும் இது பொருந்தும். இலங்கைத் தீவின் 40 கடல் மைல் தொலைவில் வைத்து ஈரானியக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. இது இந்தியாவின் செல்வாக்கு மண்டலம்.அமெரிக்கா எது வரைதான் வரமுடியும் என்பதனை அங்கே காட்டியிருக்கிறது. சிறிய இலங்கைத் தீவு சுதந்திரம்,இறைமை என்றெல்லாம் வீரம் காட்டவில்லை.

இந்தியா யாருடைய பக்கம்? இந்தியாவின் மௌனம் அதன் ராஜதந்திரமான வார்த்தைகள் எதை உணர்த்துகின்றன? ஈரானுக்கு அவர்கள் ஆதரவில்லை என்பதைத்தான். பாரசீகத்தைப் போலவே இந்திய பேரரசும் ஒரு பெரிய பண்பாட்டு நிலப்பரப்பு. ஆனால் ஒருநாட்டின் ஆல்புல எல்லைக்குள் நுழைந்து அந்தநாட்டின் தலைவரைக் கொல்லும் காட்டு விதியை இந்தியாஆதரிக்கின்றதா? எதிர்கின்றதா?

இப்படிப்பட்டதோர் உலகச் சூழலில் அரசற்ற சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை எவை?

ஒருபகுதியினர் ஈரான் தாக்கப்படுவதை ரசிக்கிறார்கள். ஏனென்றால் ஈரான் இறுதிக் கட்டப் போரில் அரசாங்கத்தின் பக்கம் நின்றது. ஈரான் மட்டுமல்ல, கியூபா, வியட்நாம், பாலஸ்தீனம் போன்ற நாடுகளும் ஐநாவில் அரசாங்கத்தின் பக்கம்தான் நிற்கின்றன.


கியூபா எப்பொழுதும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் பாதிக்கப்படும் ஒரு நாடு.அங்கே மருத்துவ, பொருளாதாரத் தடை காரணமாக முதியவர்கள் இறந்து கொண்டிருப்பதாக ஒரு சிறுமி எழுதிய கடிதம் சமூகவலைத்தளங்களில் வாசிக்ககிடைத்தது.பொருளாதாரத் தடையால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் ஈழத் தமிழர்கள் கியூபாவின் பக்கம்தான் நிக்கவேண்டும். ஆனால் ஐநாவில் கியூபா ஈழத் தமிழர்களோடு நிற்பதில்லை.

இன்னுமோர் உதாரணம்.மேற்காசியாவில் அரசற்ற குர்திஷ் மக்கள் வெவ்வேறு நாடுகளால் பங்கிடப்படுகிறார்கள். அங்கெல்லாம் அவர்கள் இப்பொழுது அமெரிக்காவின் உதவியோடு அந்தந்த அரபு நாடுகளுக்கு எதிராக போராடுகிறார்கள். இந்த இடத்தில் அவர்கள் அறநெறியின் அடிப்படையில் அமெரிக்காவுக்கு எதிராக நிற்கவேண்டுமா? அல்லது எதிரியின் எதிரி எனக்கு நண்பன் என்று ராஜதந்திரமாக முடிவெடுக்கவேண்டுமா? எது சரி? அறமா? விடுதலையா?

இந்த இடத்தில் அறமும் விடுதலையும் ஒன்றுடன் ஒன்றுபொருந்தவில்லை. அரசற்ற சிறிய மக்கள் கூட்டத்துக்கு இது தான் விதி. ஏன் இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கும் இதுதான் விதி.

போர் என்று வந்தால் அங்கே தர்மம், நீதி நியாயங்கள் இருக்காது. வெற்றியை உறுதிப்படுத்துவது என்ற ஒரே இலக்கு மட்டும்தான் இருக்கும். அது ஒரு காட்டு விதி. அது நாகரீகமடைந்த மனிதர்களின் விதியல்ல. மனித குல நாகரீகம் என்பது போரைத் தவிர்ப்பது. ஆனால் விலங்குகளின் விதி அது வல்ல.அங்கே வெல்வது தான் பிழைக்கும். அதுதான் காட்டுவிதி. இங்கே தொடக்கத்தில் கூறப்பட்ட சிறுவர் கதையில் இருப்பது அது தான்.


ஓநாய்கள் பசியோடு திரியும் காட்டுக்குள் தான் ஆட்டுக் குட்டிகளும் வாழ்கின்றன. ஈழத் தமிழர்களும் வாழ்கிறார்கள். ஓநாய்களிடமிருந்தும், சிங்கங்களிடமிருந்தும், ட்ராகன்களிடமிருந்தும் ஈழத் தமிழர்கள் தப்பிப்பிழைக்கவேண்டும். தமதுபோராட்டத்தின் நீதிக்கும், தமது ராஜதந்திர இலக்கிற்கும் இடையே ஏதோ ஒரு சமநிலையைப் பேண வேண்டும். "இதயத்தில் புறாக்களைப் போலகபடமற்றவர்களாகவும்.செயலில் பாம்புகளைப் போலஎச்சரிக்கையுணர்வோடும்" போராட வேண்டும்.



மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகத்தின் முதலாவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சமூக அறிவியல் அரங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ' பாரதி நினைவுப் புலமைக் கருத்தாடல்' நிகழ்வில் பாரதியின் உருவப்படத்துக்கு மூத்த பத்திரிகையாளர் என்.வித்தியாதரன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்வதையும் சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் தலைமையுரை நிகழ்த்துவதையும் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் (பாரதியின் பத்திரிகைப் பணி - ஒரு நோக்கு), பேராசிரியர் தை. தனராஜ் (தமிழ்மூல கல்விச்சூழலில் கல்விச் சீர்திருத்தம் ), சட்டத்தரணி எழில்மொழி இராஜகுலேந்திரா (பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கான முயற்சிகள் ), பேராசிரியர் அ. சர்வேஸ்வரன் ( தமிழ் மக்களும் அரசியலமைப்பும் ) ஆகியோர் உரையாற்றுவதையும் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் தமிழர் கட்சியும் நமது தமிழ்க் கட்சிகளும்



- கந்தையா அருந்தவபாலன்

**தமிழ்நாட்டில்** அண்மையில் சீமான் தலைமையிலான 'நாம் தமிழர்' கட்சி பாரிய மாநாடு ஒன்றை நடத்தியதுடன் அம்மேடையில், வரவிருக்கும் அம்மாநிலத் தேர்தலுக்கான 234 வேட்பாளர்களையும் அறிமுகப்படுத்திய செய்திகளையும் காட்சிகளையும் பார்க்க முடிந்தது. அம்மாநாட்டின் சிறப்புத் தொடர்பாக தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவில் தேசிய அளவிலும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் இன்றுவரை சிலாகித்துப் பேசப்பட்டுவருவதை அவதானிக்க முடிகிறது. அக்கட்சியின் கொள்கைகள், வெளிப்பாடுகள் தொடர்பான நேர்மறையான, எதிர்மறையான விமர்சனங்களை ஒருபுறம் வைத்துவிட்டு அக்கட்சியின் தலைமைத்துவம், அதன்வளர்ச்சி, கட்சித் தொண்டர்களின் பண்பு மற்றும் குறித்த மாநாட்டின் ஒழுங்கமைப்பு போன்ற விடயங்களை நமது தமிழ்க்கட்சிகளின் செயற்பாடுகளுடன் ஒப்பு நோக்குவதே இப்பத்தியின் நோக்கமாகும்.


நாம் தமிழர் கட்சி 2010 இல் இயக்குனரும் நடிகரும் தமிழ்த் தேசியவாதியுமான சீமான் தலைமையில் உருவாக்கப்பட்டது. எனினும் அக்கட்சி 2016 ஆண்டிலேயே முதன்முதல் தேர்தலில் போட்டியிட்டது. அவ்வாண்டில் நடபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு 1.1 வீத வாக்குகளைப் பெற்றது. பின்னர் அதேபோல 2021 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அக்கட்சியின் வாக்கு எண்ணிக்கை 6.7 வீதமதக உயர்ந்தது. அதேபோன்று 2024 நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதன் வாக்கு எண்ணிக்கை 8.2 வ;ீதமாக அதிகரித்துள்ளது. அக்கட்சி தனது மக்கள் ஆதரவுத்தளத்தை 8 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 8 மடங்காக உயர்த்தியுள்ளதைக் கண முடியும்.

தமிழ்நாட்டு அரசியலில் அக்கட்சியினது இந்த வளர்ச்சி என்பது ஒரு சாதனையாகவே கருதப்படவேண்டும். தமிழ் நாட்டில் பரந்த அடிப்படையில் மாநிலம் முழுவதும் செல்வாக்குள்ள கட்சிகள் இரண்டுதான். ஒன்று திராவிட முன்னேற்றக்கழகம் (தி.மு.க), மற்றது அண்ண திராவிட முன்னேற்றக்கழகம் (அ.தி.மு.க). இந்த இரண்டு கட்சிகளும் தற்போதுள்ள தலைவர்களால் உருவாக்கி வளர்க்கப்பட்டவையல்ல. தி.மு.க அறிஞர் அண்ணாவினால் தொடக்கப்பட்டு கலைஞர் கருணாநிதியால் வளர்க்கப்பட்டு பின்னர் ஸ்ராலினிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தி.மு.கவின் மக்கள் ஆதரவுத் தளத்தை பெருமளவு உருவாக்கிய புகழ்மிக்க நடிகர் எம்.ஜி.ஆர் அக்கட்சியிலிருந்து வெளியேறித் தொடக்கிய புதிய கட்சியான அ.தி.மு.க பின்னர் பிரபல நடிகை ஜெயலலிதாவினால் வளர்க்கப்பட்டு இப்போது எடப்பாடி பழனிச்சாமியின் கையிலுள்ளது. இந்தவகையில் இப்போதுள்ள அக்கட்சித்தலைவர்கள் அக்கட்சிகளின் நிறுவினர்கள் அல்லர். அக்கட்சிகளின் மேலாளர்கள் மட்டுமே. முன்னவர்களினால் நட்டு வளர்க்கப்பட்ட மரத்தில் இலகுவாகக் கனிபறிப்பதுபோல. அதுமட்டுமன்றி நீண்டகால ஆட்சி, மத்திய அரசில் பங்காளர்கள், அவற்றால் தனிப்பட்ட ரீதியிலும் கட்சி ரீதியிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட பணபலம், ஊடகங்கள் எனப் பலவழிகளிலும் இவ்விரு கட்சிகளும் கொழுத்துள்ளன. இவற்றுக்கு மேலாக சாதி அடிப்படையில் பாட்டளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் போன்றனவும் ஏலவே பலம்பெற்ற கட்சிகளாக உள்ளன. சமகாலத்தில் மத்தியில் ஆட்சியிலுள்ள பாரதிய ஜனதா கட்சி தனது ஆட்சியதிகாரச் செல்வாக்கினால் ஒருபுறத்திலும் இந்திய தேசிய காங்கிரஸ் நீண்டகால பாரம்பரியக் கட்சி என்ற வகையிலும் கணிசமான செல்வாக்கை கொண்டுள்ளன.

இவ்வாறானதொரு அரசியல் சூழ்நிலையில் அக்கட்சிகள் போல எந்தவொரு பின்புலமோ, வாய்ப்புக்களோ இல்லாதவொரு நிலையில் தமிழ்நாட்டில் புதிய கட்சியொன்றை உருவாக்கி, புதிய கொள்கைகளின் அடிப்படையில் வளர்த்தெடுப்பது என்பது இலகுவான ஒரு காரியமில்லை. அதுவும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இவ்விரு திராவிடக்கட்சிகளுக்கு எதிராக மட்டுமன்றி மத்திய அரசின் சிந்தாந்தங்களுக்கு மாறான வகையிலும் தனித்துவமாக, தனியாகநின்று வளர்வதென்பது எவ்வளவு கடினமானது என்பதைத் தமிழக அரசியலின் நடப்புப் பண்புகளை அறிந்தவர்களுக்கு நன்கு விளங்கும். இவ்வாறான ஒரு நிலையில் திரையுலக மற்றும் அரசியல் பிரபலங்கள் எவருமின்றி வரையறுக்கப்பட்ட நிதிவளங்களுடன் சீமான் தன்னந்தனியாக நின்றே நாம் தமிழர் கட்சியினை இன்றைய நிலைக்கு உயர்த்தியுள்ளதைக் காணமுடியும்.

இவ்வாறு தமிழ் நாட்டில் சீமான் தேனீ கூடுகட்டுவதுபோல 2010 இலிருந்து சிறுகச் சிறுக நாம் தமிழர் கட்சியை வளர்க்கும்போது இங்கு அதற்கு எதிர்மறாக நமது தமிழ்க்கட்சிகள் ஏலவே கட்டப்பட்ட தேன்கூட்டைக் கலைப்பதுபோல அரசியல் கட்சிகளைச் சிதைத்து வருவதையே காணமுடிகிறது. அதுவும் தமிழ்நாட்டில் சீமானின் கட்சிக்கு இருப்பதைபோல பிறகட்சிகளின் சவால்கள் இக்கட்சிகளுக்கு இல்லாத ஒரு நிலைமை இல்லாதிருந்தும்கூட 2010 இற்குப் பின்னரான, குறிப்பாக யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழத் தேசியக் கட்சிகளின் நிலையை அல்லது வளர்ச்சிப்போக்கினை அவதானித்தால் அந்த வளர்ச்சி எதிர்கணியமாக அதாவது வளர்ச்சிக்குப் பதிலாக அவை வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கே தென்படுகிறது. இது கட்சிகளின் கூட்டுக்களுக்கு மட்டுமன்றி தனிக்கட்சிகளுக்கும் பொருந்தும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சிகளான இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் தமிழ்நாட்டின் தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகளுக்கும் இடையில் சில ஒத்த பண்புகள் காணப்படுகின்றன. இக்கட்சிகளின் இன்றைய தலைவர்கள் யாரும் அவற்றின் நிறுவுனர்கள் அல்லர். அத்துடன்




ஏதோவொரு வகையில் அக்கட்சிகளின் தலைமைப் பதவிகளைக் கையகப்படுத்தியுமுள்ளனர். மேலும் தி.மு.க வைப்போலவே இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இப்போது குடும்பக் கட்சியாகும். இதன் முக்கிய விளைவு என்னவெனில் இக்கட்சிகளை உருவாக்கி வளர்ப்பதற்கு செலுத்தப்பட்ட உழைப்பையும் அர்ப்பணிப்புகளையும் இக்கட்சிகளின் தற்போதைய தலைவர்கள் உணரும் நிலையில் இல்லை என்பது. ஆனால் சிறிய வேறுபாடு ஸ்ராலின் இளமைப்பருவத்திலிருந்தே தி.மு.க கட்சிச் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகித்து வந்தமையால் அக்கட்சியை கட்டிக்காப்பதிலும் வளர்ப்பதிலும் அவரது அணுகுமுறை மேம்படுகிறது.

மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துச் சொத்துக்களைச் [illegible]

இருக்கும் மதிப்பும் அதைப் பேணும் அக்கறையும் அத்தந்தையின் மகனிடம் காணப்படுவதில்லை என்பது எமது சமூகத்தில் காணப்படும் பொதுவானதொரு பண்பு. அந்த மகனைப்போலவே இன்றுள்ள கட்சித் தலைவர்கள் கட்சி தொடர்பாக கொண்டிருக்கும் அக்கறையீனம் காணப்படுகிறது. இது தனிக்கட்சிகளில் மட்டுமல்ல, கட்சிகளின் கூட்டுக்களிலும் காணப்படுகிறது. தமிழ் மக்களுக்கான அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது வழமையான அரசியல் கூட்டுக்களிலிருந்து, குறிப்பாக வழமையான தேர்தல் கூட்டுகளிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். இக்கூட்டு தமிழ்த் தேசியத்தின் ஓர் ஜனநாயக வடிவம். இதன் நோக்கம், அதனை உருவாக்குவதில் இருந்த சவால்கள், அதனை மக்கள் மத்தியில் ஆழவேரூன்றச் செய்வதற்குச் செய்யப்பட்ட உழைப்பு போன்றவை இப்போதுள்ள பல தலைவர்களுக்கு, குறிப்பாக அக்கூட்டமைப்பைச் சிதறச் செய்த பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

கூட்டமைப்புக்கு மட்டுமில்லை, அதிலுள்ள கட்சிகள் சிலவற்றுக்கும் அதே நிலைதான். தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழரசின் இன்றைய நிலை என்ன? இக்கட்சியின் இன்றைய முக்கிய தலைவர்களில் எத்தனைபேர் இக்கட்சியை வளர்ப்பதற்கு பாடுபட்டுள்ளனர். குறைந்தது இக்கட்சியின் முன்னைய தலைவர்களின் அர்ப்பணிப்புகள் தொடர்பில் மிகச் சிறியளவேனும் உணர்வுகளை இவர்கள் கொண்டிருக்கிறார்களா? அப்படி இருந்தால் அக்கட்சியை இந்த நிலைக்குத் தள்ளுவார்களா? அல்லது அதற்கு அனுமதிப்பார்களா? முதலில் கூட்டமைப்புச் சிதைக்கப்பட்டது. இப்போது தனிக்கட்சி சிதைக்கப்படுகிறது. வழிப்போக்கர்களின் கையில் கட்சி அகப்பட்டால் இப்படித்தான் நடக்கும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்கள் ஆதங்கப்படுவதில் உண்மையுள்ளதா? இது தமிழரசுக் கட்சியில் பெரிதாகத் தெரிந்தாலும் ஏனைய கட்சிகளும் இதிலிருந்து விலக்கானவை அல்ல. ஆயுதப்போராளிகளாகளாக இருந்து ஜனநாயகப் பாதைக்குத் திருப்பியதாகச் சொல்லப்பட்ட ஈபிஆர்எல்எவ், ரெலோ போன்ற கட்சிகளும் கூட இதேபோலத்தான் பல பிரிவுகளாகச் சிதைந்தன.

2010 இல் கட்சியைத் தொடக்கி 2016 இல் முதன் முதல் தேர்தலில் இறங்கிப் பெற்ற 1.1 வீத வாக்குகளை கடந்த எட்டு ஆண்டுகளில் 8.2 வீதமாக சீமான் தனியொரு ஆளாக நின்று உயர்த்திய காலத்தில் நமது தமிழ்க் கட்சிகள் கூட்டாக 2010 இல் பெற்ற 22 பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 2024 இல் கூட்டாகவன்றி கூட்டுவதன்மூலம் 10 ஆகப் பெற்றுள்ளன. அங்கு ஒரு கட்சி ஒரு தலைவன். இங்கு பல கட்சி பலதலைவர்கள் ஆனால் விளைவு எதிர்க்கணியம். அங்கு ஒரு தலைவன் கட்சியைப் படிப்படியாக கட்டி வளர்க்கிறான். இங்கு நன்கு கட்டிவளர்த்து ஒப்படைக்கப்பட்ட கட்சியை, கூட்டமைப்பைப் பல தலைவர்கள் சிதைத்துச் சின்னாபின்னமாக்கி விட்டார்கள் என்பதே உண்மை. ஏனிந்த நிலைமை? இந்தகைய போக்கைத் தொடர்ந்தும் அனுமதிப்பதன்மூலம் ஏற்படும் மோசமான விளைவுகள் தொடர்பாக தலைவர்கள் மறந்தாலும் தமிழ் மக்கள் விரைந்தும் ஆழமாகவும் சிந்திக்கவேண்டிய நேரமிது வல்லவா? தவறவிட்டால் தந்தை செல்வா போன்ற தலைவர்களாலும் தலைவர் பிரபாகரனாலும் கட்டி வளர்க்கப்பட்ட தமிழ்த்தேசியம் கரைந்து போவதும் அதன்வழி தமிழினம் தனது தனித்தவத்தை இழந்து போவதும் மட்டும் உறுதி.

நாம் தமிழர் கட்சி இவ்வளவு சிறப்பான முறையில் தனது மாநாட்டை நடத்தியதென்றால் அதன்பின்னாலிருந்த அதனடிப்படைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். மற்றைய கட்சிகளைப்போலன்றி தானாகச் சேர்ந்த கூட்டமாக மக்கள் திரண்டிருந்ததுடன் அவர்கள் ஒழுங்கான முறையில் ஒரு பயிற்சிக்களம்போல செயற்பட்டிருந்தார்கள். இதன்பின்னாலிருக்கும் விடயங்களில் முக்கியமானவையாக இரண்டைப் பார்க்க முடிகிறது. ஒன்று அடிமட்டத்தில் மக்களிடயேயான கட்சியின் ஊடாட்டம். இரண்டாவது கட்டுக்கோப்பாக தொண்டர்களை வளர்ப்பது. இது இங்கு தற்போது ஆட்சியிலுள்ள ஜே.வி.பி ( தேசிய மக்கள் சக்தி)யிடமும் காணக்கூடிய ஒரு பண்பு. இவ்வாறானதொரு அடிமட்டக் கட்டமைப்புகள் இங்குள்ள தமிழ்க்கட்சிகளிடம் உள்ளனவா? அத்தகைய கட்டமைப்புகளை உருவாக்குவதில் அக்கட்சிகளின் தலைவர்கள் எந்தளவு அக்கறை காட்டுகிறார்கள்?

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் தரைவழி தாக்குதலில் குர்திஷ் படை! அமெரிக்காவால் மீண்டும் குர்துக்கள் பலிக்கடா?

- ஜங்கரன் விக்கினேஸ்வரா




**ஈரானில் அமெரிக்க படைகள் தரை தாக்குதலை உடனடியாக செய்ய முடியாத நிலையில், குர்திஷ் படையினர் தயாராகி வருகின்றனர். இவ்வாறு குர்திஷ் படைகளை முன்னணியில் களமிறக்கி அமெரிக்காவுக்காக போர் செய்வது இரண்டாவது தடவையாகும்.**

**ஈரானின்** அணுசக்தி கனவை நசுக்கி, அமெரிக்காவிற்கு தரைவழியாக படை நகர்த்த குர்திஷ் வீரர்கள் முன்னேறி வருகிறார்கள் என அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானில் சுதந்திரம் வேண்டி, துணிச்சலாக தரை நடவடிக்கையில், ஆயிரக் கணக்கான குர்திஷ் பெஷ்மெர்கா போராளிகள் ஈராக்கிலிருந்து வடமேற்கு ஈரானுக்கு எல்லையைத் தாண்டி நுழைந்துள்ளனர். ஐஎஸ்ஐஎஸ் இஸ்லாமிய அரசுடன் போராடி கலிபா கனவுகளை நொறுக்கி, உலகை திரும்பிப் பார்க்க வைத்த அச்சமற்ற குரதிஷ் வீரர்கள் இவர்கள்தான். இப்போது அவர்கள் ஈரானின் படை பிரிவுகளை முறியடித்து, மூலோபாய நிலத்தைக் கைப்பற்றி முன்னேறி இருக்கிறார்கள் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரானின் பாலிஸ்டிக் ஏவுகணை சாம்ராஜ்யம் மற்றும் அணுசக்தி திட்டத்திற்கு எதிராக ஒரு பெரிய போரை நடாத்தும் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் உண்மையான உதவியை குர்திஷ் படைகள் வழங்குவார்கள் என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். அமெரிக்க உளவுத்துறை மற்றும் இஸ்ரேலிய விமானங்கள் மூலம் பாதுகாப்பு வழியை தெளிவுபடுத்தியுள்ள நிலையில், குர்திஷ் படைகள் தரையில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈரானின் ஒடுக்கப்பட்ட மில்லியன் கணக்கான குர்திஷ் மக்கள் இறுதியாக தங்கள் சொந்த நாட்டின் தலைவிதியை மாற்ற முயற்சிக்கின்றனர் என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார். குர்திஷ்தானின் குர்திஷ் சிங்கங்களுக்கு நன்றி. நீங்கள் உங்கள் சொந்த மக்களை மட்டும் பாதுகாக்கவில்லை, ஒரு கொடூர ஆட்சியை, பேரழிவு அச்சுறுத்தல்களில் இருந்து காப்பாற்ற உதவுகிறார்கள் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**தரை தாக்குதலில் குர்திஷ் படை:**

ஈரானில் அமெரிக்க படைகள் தரை தாக்குதலை உடனடியாக செய்ய தயாராக இல்லாத நிலையில் , குர்திஷ் படையினர் தரை தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனர். இவ்வாறு குர்திஷ் படைகளை முன்னணியில் களமிறக்கி அமெரிக்காவுக்காக போர் செய்வது இரண்டாவது தடவையாகும்.

சிரியாவில் இஸ்லாமிய அரச பயங்கரவாதத்தை எதிர்த்து போரிட்ட குர்திஷ் படைகளை அமெரிக்கா அண்மையில் கைவிட்டு சென்றது. தற்போது ஈரானில் தரை தாக்குதலுக்கு குர்திஷ் படையினரை பயன்படுத்தி, மீண்டும் பலிக்கடாவாக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

**நாடற்ற குர்திஷ் மக்கள்:**

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர். ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக்குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப்பட்டார்கள்.

ஈரானுக்கு எதிராக தரை நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கவால் பயன்படுத்தப்படும் குர்திஷ் இனத்தினரின் தனி நாட்டினை உருவாக்கும் முயற்சியை அமெரிக்கா தனது தேவைக்காக பயன்படுத்துவதுடன், குர்திஷ் இயக்கங்களுக்கு ஆயுத பயிற்சி, நிதி வழங்குதல் போன்றவற்றினை சிஐஏ மேற்கொண்டு வருவதனால் அமெரிக்காவின் கொத்தடிமைகளாக தொடர்ந்து உள்ளனர்.

2003 ஈராக்கில் சதாம் ஹூசைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொண்டபோது, குர்திஷ் போராளிகள் அமெரிக்காவுக்கு வழங்கிய பங்களிப்பு பிரதானமானது.

அதுபோல் 2011 லிருந்து சிரியாவில் பசர் அல்-அசாத்தின் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் குர்திஷ் போராளிகள் அமெரிக்காவினால் களம் இறக்கப்பட்டனர்.

அதன் பின்னர் 2014 க்கு பின்பு சிரியாவில் இஸ்லாமிய அரச இயக்கத்துக்கு எதிராக குர்திஷ் இயக்கத்தினர் அமெரிக்காவினால் பயன்படுத்தப்பட்டனர். ஆனாலும் இதுவரையில் அமெரிக்காவினால் குர்திஷ்களுக்கான தனி நாட்டினை அமைத்துக்கொடுக்க முடியவில்லை.

தற்போது ஈரானுக்கு எதிராக அமெரிக்கா - இஸ்ரேல் ஆரம்பித்துள்ள போரில் இவ்விரு நாடுகளும் எதிர்பார்த்த இலக்கினை இதுவரை அடைய முடியவில்லை.
ஈரானிடமிருந்து அமெரிக்காவும், இஸ்ரேலும் எதிர்பாராத இழப்புக்களை எதிர்கொண்ட நிலையில், குர்திஷ் போராளிகள் மூலமாக ஈரானுக்குள் தரைவழித் தாக்குதலை ஆரம்பிக்கும் முயற்சியில் அமெரிக்காவும் இஸ்ரேலும் இறங்கியுள்ளது.

இதற்காக ஈரானிய குர்திஷ்தான் ஜனநாயக கட்சி முஸ்தபா ஹிஜ்ரியுடனும் மற்றும் ஈராக்கில் உள்ள குர்திஷ் இயக்க தலைவர்களுடனும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பேச்சு நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குர்திஷ் இயக்கங்களுக்குள் இஸ்ரேலின் மொசாட்டும் ஆழ ஊடுருவியுள்ளதுடன், பெருமளவான ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த தரைவழி தாக்குதல் முயற்சியை முறியடிக்கும் பொருட்டு ஈரான் கடுமையான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக ஈரானின் ஏராளமான படைகளை

**சிரியாவில் இஸ்லாமிய அரச பயங்கரவாதத்தை எதிர்த்து போரிட்ட குர்திஷ் படைகளை அமெரிக்க அண்மையில் கைவிட்டு சென்றது. தற்போது ஈரானில் தரை தாக்குதலுக்கு குர்திஷ் படையினரை அமெரிக்க பயன்படுத்தி, மீண்டும் பலிக்கடாவாக்க உள்ளது**




ஈரானின் வட மேற்கு எல்லையில் குவித்துள்ளதுடன், ஈராக், துருக்கி ஆகிய நாடுகளில் உள்ள குர்திஷ் இயக்கங்களின் நிலைகள் மீது ஈரான், ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை நடாத்தி வருகின்றது.

**துருக்கியில் ஆயுத போராட்ட முடிவு:**

நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் துருக்கியில், தங்களது ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒரு வரலாற்று முடிவை 2025இல் அறிவித்தனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் 30 போர்க் கப்பல்களை தாக்கித் தகர்த்தது அமெரிக்கா

புளோரிடா, மார்ச். 08

ஈரான் கடற்படையின் ட்ரோன் ஏவும் கப்பல் உட்பட 30 இற்கும் மேற்பட்ட கப்பல்களை தாக்கித் தகர்த்ததாகவும், ஈரானில் 200 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவ அதிகாரி பிராட் கூபர் , பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் ஆகியோர் புளோரிடாவில் செய்தியாளர்களிடம் கூறுகையில், ஈரான் கடற்படையை ஒட்டு மொத்தமாக அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்க படைகள் ஈடுபட்டுள்ளன.

ஈரானின் மிகப் பெரிய ட்ரோன் ஏவும் போர்க்கப்பலை தகர்த்தோம். அது தற்போது எரிந்து கொண்டிருக்கிறது. அமெரிக்கா - இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியதில் இருந்து இதுவரை 30 இற்கும் மேற்பட்ட ஈரான் போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

ஈரானின் சுமார் 200 இலக்குகள் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன. பூமிக்கு அடியில் ஈரான் அமைத்துள்ள ஏவுகணை தளங்கள் மீது, அமெரிக்காவின் பி-2 குண்டு வீச்சுவிமானங்கள் 2000 பவுண்ட் எடையுள்ள பல குண்டுகளை போட்டன.

இதன் காரணமாக ஈரானின் ஏவுகணைத் தாக்குதல் 90 சதவீதம் குறைந்துள்ளது. ட்ரோன் தாக்குதல் 83 சதவீதம் குறைந்துள்ளது. வரும் நாட்களில் ஈரான் மீதான விமான தாக்குதல் தீவிரமடையும் என்று கூறினர். (எ)

## இறந்தவர்களை மறக்க...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளுக்கு பதிலளிப்பதை நீண்டகாலமாக தவிர்த்த இலங்கை கடந்த காலத்தை மீண்டும் திறப்பது உறுதிப்பாட்டுக்கு ஆபத்தானதாக அமையும் என்றும் எதிர்காலத்தின் மீது கவனத்தைக் குவிப்பதே வெற்றிக்கான பாதையாகும் என்றும் வாதிடுகிறது.

ஆனால், நினைவும் உண்மை மற்றும் நீதிக்கான வேட்கையும் மறைந்துவிடுவதில்லை. கட்டுப்படுத்தும் ஆற்றலுடைய கோட்பாடுகளாக உண்மைக்கும் நீதிக்கும் முன்னுரிமை கொடுப்பதன் மூலமாக அரசாங்கம் பொது நிறுவனங்கள் மீது மக்களுக்கு மீண்டும் நம்பிக்கை ஏற்ப டுத்துவதை ஆரம்பிக்க முடியும். இதற்கு என்ன நடந்தது என்பதை விசாரிப்பதும் ஏன் பொறுப்புக்கூறல் மறுக்கப்படுகிறது என்பதை அறிவதும் அவசியமானதாகும். காயங்களை குணப்படுத்துவது என்பது இறந்தவர்களை மறப்பதில் தங்கியிருக்கவில்லை. நீதி என்பது தண்டனை வழங்குவது மாத்திரமல்ல, பழைய நிலைக்கு கொண்டு வருவதுமாகும். அது பேசப்படாத சுமைகளை தூக்கிச் செல்லாமல் சமூகங்கள் முன்னோக்கிச் செல்ல அனும திக்கிறது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள் , போர் இடம்பெற்ற வருடங்களில் காணா மல் போனவர்கள், அரசியல் வன்செயல்களில் இழப்புக் களை சந்தித்தவர்கள் எல்லோரும் சமத்துவமாக நடத்து வதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ள இலங்கைக் குடிமக் களின் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்களே. இது உண்மை தொடர்பில் நிலையான ஒரு தராதரத்தை வேண்டிநிற் கிறது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசா ரணைகள் எங்கு இட்டுச் சென்றாலும் அதை நோக்கி முன்னெடுப்பதன் மூலமும் போர் வருடங்களின் தீர்வு காணப்படாத குறாறங்களுக்கு தீர்வைக் காண்பதன் மூலமும் அரசாங்கம் நாட்டை மீட்சி நோக்கிய பாதைக்கு கொண்டு செல்ல முடியும்.

## நாம் தமிழர்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் ஒப்பீட்டுரீதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் அவ்வாறான ஒரு வலையமைப்பு உயர்ந்த நிலையில் இருந்தது. இன்று தலைவர்களுக்கு ஜால்ரா போடும் ஒரு கூட்டம் மட்டும் அங்கு காணப்படுகிறது. அதுவும் சார்புநிலைக் குழுக்களாக அல்லது மதில்மேல் பூனைகளாக இருக்கின்றன.

மக்களைச் சரியான வழியில் கொண்டு செல்வதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள், அரசியல் அணுகுமுறைகள், அதற்கான கட்டமைப்புகள் போன்ற எதுவும் எந்தவொரு கட்சியிலும் இயங்குநிலையில் இல்லை. தேர்தல் ஒன்று வரும்போது மட்டும் ஒவ்வொரு கட்சியும் பெரிய அரசியல் இயக்கங்கள் போன்ற பிரமைகளை மட்டும் தோற்றுவிக்க முயலுகின்றன. அல்லது ஏதாவது கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து பாராளுமன்ற ஆசனங்களுக்காக ஆலாய் பறக்கின்றன. தமிழ் அரசியல்கட்சிகள் பார்ப்பதற்கு அழகாக வெளியில் தெரிந்தாலும் அவற்றின் அத்திபாரங்கள் மிகப்பலவீனமானவை என்பதே உண்மை. வேண்டுமானால் மற்றக்கட்சியைவிட எமது கட்சி பலமானது என பெருமைபேசலாம். ஆனால் எல்லாமே அடிப்படையில் பலவீனமானவையே. தமிழ்நாட்டில் திராவிட மாயையிலும், திரைப்பட மாயையிலும், இந்தியத் தேசிய மாயையிலும் ஊறிநிற்கின்ற மக்களிடம் தமிழ்த்தேசிய உணர்வை சீமானால் சிறப்பாகக் கட்டிவளர்க்க முடிகிறதென்றால் ஏலவே நன்கு கட்டி வளர்க்கப்பட்ட அந்த உணர்வை எமது தலைவர்களால் ஏன் பாதுகாக்க முடியாமல் உள்ளது?

அணைகின்ற தீயில் இன்றும் குளிர்காய எத்தனிக்கிறார்களேயன்றி அத்தீயை அணையாது தொடர்ந்து பாதுகாக்க வேண்டுமென்ற கரிசனை இன்று எத்தனை தலைவர்களிடம் உள்ளது? அதுவும் இன்று அதனை அணைப்பதற்கு மிக சூட்சுமமான காய்நகர்த்தல்கள் பல மேற்கொள்ளப்படும்போது இன்னும் விழிப்பாக இருக்கவேண்டியதொரு நிலையில், ஒருபுறத்தில் தூங்கிக் கொண்டும் இன்னொருபுறத்தில் அதற்கான வாய்ப்புகளை தாமாகவே உருவாக்கிக் கொண்டுமல்லவா எமது தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குளத்தைக்கலக்கி கொக்குக்கு இரையைச் சுலபமாக ஊட்ட விரும்புகிறார்களா? இலங்கையில் புத்தமதம் இலகுவாக கால்பதித்தமைக்குரிய காரணங்களில் பிரதானமானது அப்போது இங்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட எந்தவொரு மதமும் இல்லாதிருந்தமை என வரலாறு கூறுகிறது. அதேபோலவே தமிழ்த்தேசியம் உறுதியாவும் உணர்வுடனும் மக்கள் மனங்களில் இல்லாது போகுமாயின் இலகுவாக எம்மக்களை பேரினவாத அரசியல் தம்வசப்படுத்திவிடும் என்ற உண்மையை எப்போது நாம் புரிந்துகொள்ளப் போகிறோம்?

# ஈரானின் மெஹ்ராபாத் சர்வதேச விமான நிலையம் மீது தாக்குதல்

தெஹ்ரான், மார்ச். 08

ஈரானின் மிகவும் பரபரப்பான விமான நிலையமாக கருதப்படும் மெஹ்ராபாத் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை பாரிய வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஈரானின் மிக முக்கியமான உள்நாட்டு விமான நிலையமாக கருதப்படும் இந்த மெஹ்ராபாத் விமான நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது, அங்கு பல விமானங்கள் நின்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் இருந்து பெரும் புகைமூட்டம் கிளம்பியுள்ளதுடன், இது தொடர்பான பல வீடியோ காட்சிகளும் தற்போது வெளியாகியுள்ளன.

விமான நிலையத்தின் பல இடங்கள் எதிரிகளின் இலக்காகியுள்ளதை ஈரானிய அரச ஊடகங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

இதற்கு முன்னர் கடந்த மார்ச் 4ஆம் திகதியும் இஸ்ரேல், இந்த விமான நிலையத்தை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியிருந்தது.

இதன்போது ஹெலிகொப்டர் உற்பத்திப் பிரிவு உட்பட இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக இருந்த பல கட்டமைப்புகள் அழிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், புதிய தாக்குதலில் விமான நிலையத்தின் எந்தப் பகுதிகள் இலக்கு வைக்கப்பட்டன என்பது குறித்த மேலதிக தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

(எ)

## ஈரான் தரைவழி...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி. தனிநாடு கோரி போராடும் குர்திஷ் போராளிகள் அமைப்பான பி.கே.கே-க்கும் துருக்கிக்கும் இடையிலான மோதல் 1984 இல் தொடங்கியது. இந்த மோதல் பல்லாயிரக்கணக்கான இறப்புகளுக்கு வழிவகுத்தது.

துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் தங்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தனர். நான்கு தசாப்த கால ஆயுத மோதலுக்குப் பிறகு, துருக்கியுடனான புதிய சமாதான முயற்சியின் ஒரு பகுதியாக, குர்திஷ் போராளிக் குழுவான 'குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி' ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டது.

### ஈரானுக்குள் உள்நாட்டுப் போர்?

தற்போது இந்த நாடற்ற குர்திஷ் மக்களை பயன்படுத்தி ஈரானுக்குள் உள்நாட்டுப் போர் வெடிக்கப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தெஹ்ரானுடன் உள்நாட்டுப் போருக்காக குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்க அமெரிக்க உளவுத்துறை இரகசியத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்கனவே போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஈரானிய அரசாங்கத்தை உள்ளிருந்தே பலவீனப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா உள்நாட்டுப் போரை அங்கு தூண்டத் திட்டமிட்டுள்ளது. அதிர்ச்சியூட்டும் வகையில் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ , ஈராக்கில் இயங்கும் குர்திஷ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி, ஈரானுக்குள் ஒரு பாரிய கிளர்ச்சியை உருவாக்க வியூகம் வகுத்துள்ளமை தற்போது அம்பலமாகியுள்ளது.

ஈரானிய எல்லையில் குவியும் குர்திஷ் படைகள், அமெரிக்காவின் இந்தத் திட்டத்திற்கு அமைவாக, குர்திஷ்தான் சுதந்திரக் கட்சியின் ஆயுததாரிகள் ஈரானின் எல்லைப் பகுதியான சுலைமானியா மாகாணத்தில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை உறுதிப்படுத்திய அந்த அமைப்பின் முக்கிய அதிகாரி கலீல் நாதிரி, தமது படைகள் ஈரானுக்குள் ஊடுருவத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஈரானிய - குர்திஷ் கிளர்ச்சிக் குழுவான "கோமலா" அமைப்பும், கள நிலைமைகள் சாதகமாக மாறும் பட்சத்தில் விரைவில் ஈரானிய எல்லையைக் கடந்து தாக்குதல்களை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாக எச்சரித்துள்ளது.

ட்ரம்ப் மற்றும் ஜலால் தலாபானி இடையிலான இரகசியப் பேச்சுவார்த்தையில், இந்தக் கிளர்ச்சிக்கான ஆயத்தங்கள், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஈராக்கின் குர்திஷ் அரசியல் கட்சியான தலைவர் பாஃபெல் தலாபானி ஆகியோருக்கிடையே பேச்சுவார்த்தை நடந்தது.

ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளில் குர்திஷ் குழுக்களை முழுமையாக அணிதிரட்டுவதே பிரதான நோக்கம் என்றும், அமெரிக்காவின் இலக்குகளைப் புரிந்துகொள்வதற்கும், வலுவான கூட்டணியை அமைப்பதற்கும் ட்ரம்ப் தயாராக இருப்பதாக கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

### தனித்து நிற்கும் ஈரான்:

ஈராக்கிய எல்லைகளில் குர்திஷ் போராளிகளின் நகர்வுகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து ஈரான் கடும் பதற்றமடைந்துள்ளது. ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்ச்சி குர்திஷ் தலைவர் தலாபானியைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, எல்லையில் இடம்பெறும் "பயங்கரவாத நகர்வுகள்" குறித்துக் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஆயினும், ஈரானின் செய்தி நிறுவனமான "தஸ்னிம்" , குர்திஷ் போராளிகள் ஈரானுக்குள் ஊடுருவியுள்ளதாக வெளியாகும் செய்திகளை முற்றாக மறுத்துள்ளது. ஈலாம், கெர்மன்ஷா மற்றும் மேற்கு அசர்பைஜான் ஆகிய எல்லைப் பகுதிகளில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை எனவும், இது அமெரிக்க ஊடகங்களின் உளவியல் ரீதியான பொய்ப்பிரச்சாரம் எனவும் ஈரான் தெரிவித்துள்ளது. ஈரானிய - குர்திஷ் கட்சிகளின் கூட்டணியும் தாம் தரைவழித் தாக்குதல்களை இன்னும் ஆரம்பிக்கவில்லை எனத் தந்திரோபாயமாகக் குறிப்பிட்டுள்ளது.

ஈரானில் வான்வெளித் தாக்குதல்களை விட, உள்நாட்டில் சிறுபான்மையினரான குர்திஷ் மக்களைப் பயன்படுத்தி அமெரிக்கா முன்னெடுக்கும் இந்த தரைவழி "உள்நாட்டுப் போர்" வியூகம், ஈரானிய அரசாங்கத்திற்கு ஒரு மாபெரும் சவாலாக உருவெடுத்துள்ளது என்பதே சர்வதேச அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரானியக் கப்பல்களில்...

வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்க அரசாங்கத்தின் உள்ளகத் தொடர்பாடல் "கேபிள்" தகவல்களின் படி, அமெரிக்கத் தூதரகத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரி ஜெய்ன் ஹோவெல், இலங்கை அரசாங்கத்திடம் அழுத்தமான வேண்டுகோளை முன்வைத்திருக்கிறார் என்று "ரொய்ட்டர்ஸ்" தெரிவித்துள்ளது.

"ஐரிஸ் டேனா" போர்க் கலத்தில் இருந்து உயிருடன் மீட்கப்பட்ட 32 பேரையும், "ஐரிஸ் புச்சர்" கலத்திலிருந்து கரை சேர்க்கப்பட்டுத் தற்போது கொழும்பில் தங்க வைக்கப்பட்டுள்ள 208 பேரையும் ஈரானுக்கு மீளத் திருப்பி அனுப்பக் கூடாது என்றும், அவர்களை அமெரிக்காவுக்கு எதிரான சர்வதேச பிரசார நடவடிக்கைகளுக்கு ஈரான் பயன்படுத்துவதற்கு இலங்கை அரசு துணைபோகக் கூடாது என்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உள்ளகக் கேபிள் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம், அமெரிக்கத் தூதரகத்தின் வேண்டுகோளுக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சோ, ஜனாதிபதி செயலகமோ பதில் எதையும் வழங்கவில்லை என்றும், இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்த முயன்றபோதும், அது சாத்தியமாகவில்லை என்றும் "ரொய்ட்டர்ஸ்" மேலும் தெரிவித்துள்ளது.

எனினும், மத்திய கிழக்கில் போர்ப்பதற்றம் தணியும் வரை அடைக்கலம் கொடுக்கப்பட்டுள்ளவர்களையோ, இலங்கை அரசின் பாதுகாப்பில் திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்கும் ஐரிஸ் புச்சர் கலத்தையோ விடுவிக்கும் எண்ணம் இல்லை என்று பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார் என்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உள்ளகக் கேபிள் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக "ரொய்ட்டர்ஸ்" மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (அ-ஒ)

## ஈரானியக் கப்பல் பெரும் சவால்...

4ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் 87 படையினர் உயிரிழந்ததுடன், 32 பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

அத்துடன், கொழும்பு கடற்பரப்பில் இருந்த மற்றொரு கப்பலிலிருந்து மீட்கப்பட்ட 250 இற்கும் மேற்பட்டோர் தற்போது வெலிசறை கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இக்கட்டான சூழலில், சர்வதேச கடல்சார் சட்டங்கள் மற்றும் மனிதாபிமான உடன்படிக்கைகளுக்கு அமைய இந்த பிரச்னைக்குத் தீர்வு காண சிரேஷ்ட சட்டத்தரணிகள் குழுவொன்று ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு தரப்புகளுக்கு இடையே போர்ச் சூழல் நிலவும் வேளையில், இலங்கை அரசு ஒரு மனிதா பிமானப் பொறுப்பையே நிறைவேற்றுவதாக சர்வதேச இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும், மீட்கப்பட்டவர்களின் பாதுகாப்பு மற்றும் குறித்த கப்பலை திருகோணமலை துறைமுகத்திற்குக் கொண்டு வருவது போன்ற விடயங்கள் பாதுகாப்புப் பிரிவினருக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாக இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்து வரும் அதேவேளை, மத்திய கிழக்கு பதற்றத்தை அடுத்து இலங்கையிலுள்ள 85 வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இலங்கை கடற்பரப்பில் கடற்படை மற்றும் விமானப்படை இணைந்து விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை தற்போது தீவிரப்படுத்தியுள்ளன. (அ)

## ஈரான் கப்பல் அடைக்கலம்...

இந்த நடவடிக்கை சர்வசதேச சமவாயங்களுக்கு உட்பட்டது. அப்பகுதியில் அமெரிக்க கப்பல் ஒன்று இருந்திருந்தால்கூட ஈரான் படையினரை நிச்சயம் காப்பாற்றி இருக்க வேண்டும். அதுதான் சர்வதேச சட்டம். எதிரணி சரணடைய வந்தால்கூட அவரை சுட்டுக்கொல்வதற்கு சர்வதேச சட்டத்தில் இடமில்லை.

எனவே, ஈரான் கப்பல்கள் விவகாரத்தில் இலங்கை எடுத்த முடிவு சரியானது. சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டது. அவ்வாறு செய்திருக்காவிட்டால்தால் கடும் விமர்சனங்கள் எழுந்திருக்கும்." - என்றார் பொன்சேகா. (அ)

## ஹிக்கடுவ...

சந்தேகிக்கப்படும் ஈரானிய கப்பலின் பல சிதைவுகள் நேற்று ஹிக்கடுவ முதல் சீனிகம வரையிலான கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளன.

கடற்கரை முழுவதும் டீசல் கறைகள் காணப்படுவதாகவும், மீன்களும் இறந்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகள் இந்த கடற்கரைக்கு வருவதில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

## ஈரானிய கப்பல் விவகார...

இதன்போது, இலங்கைக்கு அப்பாலான கடற்பரப்பில் இடம்பெற்ற அமெரிக்க நடவடிக்கை, இலங்கையின் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது தொடர்பான விடயங்கள் குறித்து அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத், இந்த விவகாரத்தில் ஐக்கிய நாடுகளின் கடல்சார் சாசனம் அதாவது சர்வதேச சட்டங்களை பின்பற்ற வேண்டி ஏற்படும் என நினைக்கிறேன்.

இதில் இந்து சமுத்திர விளிம்பு நாடுகளினது சங்கங்களின் நீல பொருளாதார சட்டகம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான மூலோபாய செயற்பாடுகள் ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளவேண்டும்.

இலங்கை இந்த விடயங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் 2025 ஆம் ஆண்டில் இணக்கப்பாடுகளை எட்டியுள்ளது.

எம்மால் சர்வதேச சட்டங்களை மீண்டும் உறுதிப்படுத்த முடியுமானால், எந்தவொரு சவால்களுக்கு இலங்கையினால் முகங்கொடுக்க முடியும்.

உலகின் பல நாடுகளை போலவே, ஒரு நாடாக இலங்கையும் பல சவால்களுக்கு முகங்கொடுக்கிறது

எனவே, நாம் சர்வதேச சட்டங்களை பலப்படுத்த வேண்டும் என்பதுடன், அந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியமானதாகும் என தெரிவித்தார்.

இதனிடையே, ஈரானிய கப்பல்களிலிருந்து மீட்கப்பட்டவர்கள் மீள ஒப்படைக்கப்படுவார்களா? என அமைச்சர் விஜித ஹேரத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர், "நாம் இந்த போர் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் எந்தவொரு தரப்புக்கும் ஆதரவாக செயற்படவில்லை. நாம் மனிதாபிமான அடிப்படையில் செயற்படுகிறோம்.

சர்வதேச சட்டங்களை மதிக்கிறோம். எனவே, அடுத்த கட்ட நடவடிக்கைகளை அதனடிப்படையிலே இலங்கை எடுக்கும்" என குறிப்பிட்டார். (அ)

## இலங்கையின்...

மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு, தற்போதைய அரசாங்கம் நேர்மையாகவும் பொறுப்புடனும் செயல்படுகிறது என்ற நம்பிக்கையே அடிப்படை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழல் மற்றும் வீண் விரயங்களை ஒழிப்பதில் தற்போதைய அரசாங்கம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு, பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மிக முக்கியமான காரணியாக மாறியுள்ளது.

"அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இருப்பதால், நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக ஏற்படும் பொருளாதார வலிகளைத் தாங்கிக்கொள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள்" என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்குச் சென்றிருந்தபோது விமானத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பகிர்ந்த அவர், "சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தின் பணியாளர் ஒருவர் என்னை அடையாளம் கண்டு, நமது நாட்டுக்கு உதவுவதற்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், இந்த அரசாங்கத்திற்கு உதவுங்கள், இவர்கள் நேர்மையான மனிதர்கள் என்றும் அவர் என்னிடம் கூறினார்" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். மக்களின் இந்த உணர்வே அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக அவர் கூறினார்.

"அரசாங்கங்கள் பொருளாதார நிறுவனங்களை நடத்துவதை விட, வளர்ச்சிக்கான சூழலை உருவாக்குவதிலேயே கவனம் செலுத்த வேண்டும். அந்த வகையில், இலங்கை இப்போது சரியான பாதையில் பயணிக்கிறது," என்று குறிப்பிட்ட ஜோர் ஜீவா, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் அனைவரையும் சென்றடைய இத்தகைய சமூக நம்பிக்கை மிக அவசியமானது என்று வலியுறுத்தினார். (அ)

## ஈரான் கப்பல் மீட்க...

காட்டிய மனிதாபிமான தலையீட்டை பெரிதும் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கப்பலையும் அதிலிருந்தவர்களையும் மீட்பதற்காக இலங்கை அரசாங்கம் செயற்பட்ட விதம், சர்வதேச ரீதியாக வழங்கப்பட்ட

வாக்குறுதிகளைப் பாதுகாப்பதில் இலங்கையின் அர்ப்பணிப்பைச் சிறப்பாகப் பிரதிபலிக்கிறது என்றும் மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச் தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வாகனங்களின்...

மற்றொரு வர்த்தமானி அறிவிப்பின் மூலம் ரத்து செய்யப்பட உள்ளது.

இந்த வரி திருத்தங்களின் ஒட்டுமொத்த விளைவாக, வாகன இறக்குமதிக்கான மொத்த சுங்க வரி கட்டமைப்பில் எந்த மாற்றமும் இருக்காது என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் உறுதியளித்துள்ளது.

இருப்பினும், ஏப்ரல் 1 முதல் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு, தற்போதுள்ள வரிகளுடன் கூடுதலாக 2.5 வீத சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி மட்டும் சேர்க்கப்படும்.

இதுவே வாகன இறக்குமதியாளர்களுக்கு ஏற்படும் ஒரே கூடுதல் செலவாகும் என்று சங்கம் மேலும் தெரிவித் துள்ளது. (அ)

## கடலில் இனி...

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலொன்றினால் ஈரான் நாட்டுப் போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பில், இலங்கை அரசு தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றமை கவலையளிக்கின்றது. அரசின் இந்த மௌனப் போக்கை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறான மோதல் நடவடிக்கைகள் காரணமாக, இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயம் ஒரு "போர் வலயம்" போல் மாற்றமடைந்துள்ளது. இது நாட்டின் வணிக நலன்களுக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

மேலும், இவ்வாறான பதற்றமான சூழலால் சர்வதேச கப்பல் போக்குவரத்துச் செலவுகள் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

இதன் நேரடி விளைவாக இலங்கையில் வாழ்க்கைச் செலவு மேலும் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாரிய பாதிப்புகள் ஏற்படும்." - என்று ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## ஈரானிய கப்பல் மீதான...

"ஈரானின் கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட 2,000 மைல்கள் தொலைவில் இந்தியப் பெருங்கடலில் அமெரிக்கா ஓர் ஆபத்தான ஆக்கிரமிப்புச் செயலை செய்தது.

நல்லெண்ணப் பயணத்தில் இந்திய கடற்படையின் அழைப்பின் பேரில் சுமார் 130 மாலுமிகளை ஏற்றிச் சென்ற ஈரானிய போர்க்கப்பலான தேனா சர்வதேச நீரில் தாக்கப்பட்டது.

கிட்டத்தட்ட 100 ஈரானிய மாலுமிகள் கொல்லப்பட்டனர். அமெரிக்கா ஒரு போர்க்குற்றத்தைச் செய்தது. இந்த கொடூரமான மற்றும் சட்டவிரோத தாக்குதல் சட்டம் மற்றும் கடல்வழி சுதந்திரத்தின் அடிப்படைக் கொள்கையின் கடுமையான மீறலாகும்.

மேலும், தனது நாட்டுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்தும் கூட்டு ராணுவ நடவடிக்கையை நிறுத்த உறுதியாகவும், தெளிவாகவும், தாமதமின்றியும் தலையிட வேண்டும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் நமது மக்களுக்கு எதிராகச் செய்து வரும் ஆக்கிரமிப்பு, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைக் கண்டிக்க ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் மற்றும் பொதுச் செயலாளரை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

ஈரானுக்கு எதிராகவும், பொதுமக்களுக்கு எதிராகவும் அனைத்து குற்றங்கள் மற்றும் ராணுவத் தாக்குதல்களையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர கட்டாயப்படுத்த வேண்டும். சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் போர்க்குற்றங்களின் மீதான இந்த கடுமையான மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய வேண்டும்." என்று அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# “வடக்கின் போர்” பெருஞ்சமரில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி!






யாழ்ப்பாணம், மார்ச் 09

ஒரு நூற்றாண்டுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்ட யாழ். மத்திய கல்லூரி மற்றும் பரியோவான் கல்லூரி அணிகளுக்கு இடையிலான 119ஆவது “வடக்கின் போர்” கிரிக்கெட் பெருஞ்சமர் நேற்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நிறைவுக்கு வந்தது.

விறுவிறுப்பான ஆட்டத்தின் முடிவில், யாழ்.மத்திய கல்லூரி அணி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

போட்டியின் முதல் இன்னிங்ஸில் களமிறங்கிய பரியோவான் கல்லூரி அணி 119 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

மத்திய கல்லூரி சார்பாக கணேசமூர்த்தி கௌசிகன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி மிரட்டினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடர்ந்த மத்திய கல்லூரி அணி 95 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இருப்பினும், இரண்டாம் இன்னிங்ஸில் ஆட்டம் சூடுபிடித்தது. பரியோவான் கல்லூரி சார்பாக உதயனன் அபிஜாய்சந்த் சதம் விளாசி அசத்த, அந்த அணி 223 ஓட்டங்களைக் குவித்தது. ஆனால், மத்திய கல்லூரியின் பந்துவீச்சாளர் முரளிதிசோன் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஆட்டத்தின் போக்கை மாற்றினார். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட வெற்றி இலக்கை நோக்கித் துணிச்சலாக விளையாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி, வெற்றியைத் தன்வசமாக்கியது.

இந்த வெற்றியின் மூலம், இதுவரை நடைபெற்ற 119 போட்டிகளில் யாழ் மத்திய கல்லூரி தனது 30ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இருந்தபோதிலும், 40 வெற்றிகளுடன் பரியோவான் கல்லூரி இப்போதும் வரலாற்றுப் பட்டியலில் முன்னிலையில் உள்ளது.

எஞ்சிய 41 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்ததுடன், 8 போட்டிகள் முடிவுகள் ஏதுமின்றி கைவிடப்பட்டுள்ளன.

இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் மத்திய கல்லூரி மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் மைதானத்தில் உற்சாகக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

இரு அணிகளுக்கும் இடையிலான 23யஅவது ஒருநாள் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மன்னாரில் சட்டவிரோத மீன்பிடி; கடற்படையினரால் நால்வர் கைது

மன்னார், மார்ச் 08

மன்னாரின் தெற்கு கடல் பகுதியில் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் கடலட்டைகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரின் தெற்கு கடல் பகுதியில் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக இரவு நேர சுழியோடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 4 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் 437 கடல் அட்டைகளுடன் 01 டிங்கி படகு மற்றும் சுழியோடி உபகரணங்களையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

இந்த நடவடிக்கை மூலம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 32 முதல் 48 வயதுக்குட்பட்டவர்கள் என தெரியவருகிறது.

சந்தேக நபர்களுடன் கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகள், டிங்கி படகு மற்றும் சுழியோடி உபகரணங்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

## இலங்கையை போர்க்களமாக்க திட்டமிடுகின்றதா அமெரிக்கா?

### விமல் வீரவன்ஸ கேள்வி

கொழும்பு, மார்ச் 08

ஈரான் கப்பலைத் தடுப்பதன் மூலம் இலங்கையை ஒரு நேரடி மோதல் களமாக மாற்ற அமெரிக்கா திட்டமிடுகின்றதா என்ற அச்சம் வலுவடைந்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில், ஈரான் கடற் படையைச் சேர்ந்த அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் மிலான் 2026 பயிற்சியில் பங்கேற்க வருகை தந்தி ருந்தனர். திட்டமிட்டபடி அமெரிக்கக் கடற்படையும் இதில் பங்கேற்கவிருந்த நிலையில், கடைசி நேரத்தில் அவர்கள் பின்வாங்கியுள்ளனர்.

ஈரான் போர்க்கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கம் இருந்ததாலேயே அமெரிக்கா இந்தப் பயிற்சியிலிருந்து விலகியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தமது நாட்டுக்கு அழைக்கப்பட்ட ஈரான் குழுவினர் மீது நீர்மூழ் கிக் கப்பல் மூலம் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது குறித்து இந்திய உளவுத்துறையான ரோவிற்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. இந்த ஆபத்தை அறிந்திருந்தும் ஈரான் கப்பலை வெளியேற அனுமதித்தது இந்தியாவின் நம்பகத்தன்மை குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஈரானின் இரண்டாவது கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வருவதற்கு அனுமதி கோரியபோது, அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். “இக்கப்பலை அனுமதித்தால் வான் வழியாகத் தாக்குதல் நடத்த நேரிடும்” என அவர்கள் அச்சுறுத்திய தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து, பாதுகாப்புச் செயலாளர் துய்யகொந்தா, இக்கப்பல் விவகாரத்தில் இலங்கை பொறுப்பேற்க முடியாது என ஈரான் தூதருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இருப்பினும் இலங்கையிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் பிரதி சபாநாயகர் உள்ளிட்டோர் ஜனாதிபதியைச் சந்தித்து அழுத்தங்களைக் கொடுத்துள்ளனர்.

இதன் பின் கப்பலை திருகோண மலைக்குக் கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது. கப்பலில் உள்ள நபர்களை மட்டும் கொழும் புத் துறைமுகத்திற்கு அழைத்துவர முடிவெடுத்துள்ளனர்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் புவிசார் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையை ஒரு இராணுவ மையமாக மாற்ற அமெரிக்கா முயற்சிப்பதான சந்தேகம் எழுந்துள்ளது - என்றார்.

(அ)

## ஈரானிய கப்பலில் 300 சிறுவர்கள்? குற்றச்சாட்டை மறுத்த அமைச்சர்!

கொழும்பு, மார்ச் 08

இலங்கை கடற்பரப்பிற்கு அருகில் நங்கூரமிட்டுள்ள இரண்டாவது ஈரானியக் கப்பலில் 300 சிறுவர்கள் இருப்பதாக எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார திட்டவட்டமாக மறுத்தார்.

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் உறுதிப்படுத்தப்படாத தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, உண்மைகளைச் சரிபார்க்காமல் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு அவர் எதிர்க்கட்சியினரை வலியுறுத்தினார்.

குறித்த கப்பலில் சிறுவர்கள் எவரும் இல்லை என்பதை அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

ஒரு குறிப்பிட்ட ஊடகம் முதலில் “300 சிறுவர்கள்” எனச் செய்தி வெளியிட்டு, பின்னர் அதனை “300 நபர்கள்” என மாற்றியமைத்தது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அந்தத் திருத்தப்பட்ட செய்தியை கவனிக்காமல் பழைய தகவலையே பிடிவாதமாகக் கூறி வருவதாக அவர் விமர்சித்தார்.

இவ்வாறான பொய்யான தகவல்கள் மூலம் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தச் சிலர் முயற்சிக்கின்றனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## ‘கனலி’ சஞ்சிகை வெளியீடு



யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சஞ்சிகை “கனலி” - இதழ் 06 வெளியீடும், குறுந்திரைப்பட விழாவும் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடத்தின் பதில் பீடாதிபதி கலாநிதி கி.சண்முகநாதனும் ஊடகத்துறைப் பேராசிரியர் சி. ரகுராமும் கலந்து சிறப்பித்தனர்.

கனலி சஞ்சிகை வெளியீட்டைத் தொடர்ந்து சஞ்சிகைக்கான கருத்துரையினை கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்தினார். சஞ்சிகை வெளியீட்டைத் தொடர்ந்து மாணவர்களால் இயக்கப்பட்ட குறும்படங்களின் திரையிடல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆஸி.யின் விக்டோரியாவில் இலங்கைப் பெண் உயிரிழப்பு!

### சந்தேகத்தின் பேரில் விசாரணை தீவிரம்

மெல்பேர்ண், மார்ச் 08

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்திலுள்ள லோட்ரோப் பள்ளத்தாக்கு பகுதியில், இலங்கைப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது ஒரு கொலை - தற்கொலை சம்பவமாக இருக்கலாம் என்ற கோணத்தில் விக்டோரியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விக்டோரியாவின் ஹேர்ன்ஸ் ஓக், மெக்ராத்ஸ் டிராக்கில் உள்ள ஒரு வீட்டிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் 47 வயதான சமிந்திகா ஜயவர்தன மற்றும் அவரது துணைவரான 46 வயதான ஆரோன் ஹம்மண்ட் ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த வார முற்பகுதியில், மதியம் 12.15 மணியளவில் அவசர சேவைப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் இருவரது உடல்களையும் வீட்டிற்குள் கண்டெடுத்துள்ளனர்.

சனிக்கிழமை இரவு வீட்டில் இரண்டு பலத்த சத்தங்களைக் கேட்டதாக அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் அவை பட்டாசுகள் அல்லது நரிகளை வேட்டையாடும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் என்றே அவர்கள் கருதியுள்ளனர்.



உயிரிழந்த இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்கள் என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 08.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.